விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 21 திங்கட்கிழமை (07.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இலங்கையை கண்காணிக்கும் பிரித்தானிய அரசாங்கம்

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன்னிறுத்தப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளதாக பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## அடிப்படை வசதிகளின்றி கிளிநொச்சி மாவட்டம்

### மக்கள் குற்றச்சாட்டு

யுத்த மோதல்கள் இடம்பெற்ற பிரதேசங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களாகின்ற போதிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பொது வசதிகள் இன்னும் சீராக செய்யப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்குரிய சந்தை வசதிகள் நகரில் இல்லை என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்த காலத்திலும், மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட வேளையிலும் கிளிநொச்சி நகரில் இயங்கி வந்த பொதுச் சந்தை அங்கிருந்து அகற்றப்பட்டு இரண்டு கிலோமீற்றர் தொலைவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் ஆதரவு கிடைப்பதால் மோசமாக நடத்தப்படும் தமிழர்கள்

### இந். கம்யூனிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு

(கோவை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடானது, இலங்கையில் தமிழர்கள் மோசமாக நடத்தப்படுவத ற்கு முக்கிய காரணமாகவுள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிக்கு தமிழ மக்களின் பக்கத்தில் இருப்பதற்குப் பதிலாக இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ர்ாஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ளது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டி.ராஜா கோயம்புத்தூரில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும். தமிழ்மக்கள் அனுதாபத்தையோ அவர்களின் புனர்வாழ்வுக்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு - அமெரிக்கா சந்திப்பில் விசேடமாக எதுவும் இடம்பெறவில்லை

### கொழும்பு ஊடகம் தகவல்

(வாஷிங்டன்)

வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்படும் வழக்கமான சந்திப்புகளினைப் போன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளின் சந்திப்பு இடம்பெற்றதாக ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தகைய சந்திப்புக்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல தரப்பினருடனும் நடத்துகின்றது என தமது ஊடகவியலாளர் ஒருவருக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியதாகவும் அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடனான இச்சந்திப்பு தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் (20ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளுடனான போருக்கு ஐ.தே. கட்சி ஆதரவளிக்கவில்லை!

### இப்போது குற்றம் சாட்டுகிறார் கோத்தபாய

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான போருக்கு பிரதான எதிர்க் கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி ஆதரவு வழங்கவில்லை என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நோர்வேயின் நடுநிலையான போர்நிறுத்த உடன்பாட்டையும் போர் முயற்சிகளையும் மோசமாக கையாண்ட ஐ.தே.க. தலைவர், இராணுவ மற்றும் வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பாக தீவிரமாக எடுத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கமுடியாது என்றும் அவர் கோபத்துடன் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் விடுதலைப்புலிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்து பொது மக்களின் நலனுக்கு பயன்படுத்த வேண்டும் என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்த கருத்து தொடர்பாக பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

போருக்கு பிந்திய அபிவிருத்தி திட்டங்கள், விருத்தியடைந்துள்ள சுற்றுலாத்துறை (20ஆம் பக்கம் பார்க்க)



## திடீர் காய்ச்சலால் சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

திடீரென ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.


நேற்று முன்தினம் இரவு காய்ச்சல் காரணமாக அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த ந.சுதர்சினி (வயது 13) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார். (எ-6,11)

யாழ்நகரில் புதிய கிளை நிறுவனமாக உதயமாகின்றது
MATHI COLOURS
மதி கலர்ஸ் திருமண அழைப்பிதழ் காட்சியறை
அன்புடையீர்!
நிகழும் மங்கலகரமான கர வருடம் ஐப்பசித்திங்கள் 21ம் நாள் (07.11.2011) திங்கட்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும், துவாதசி திதியும், சித்தயோகமும் கூடிய காலை 10.00 மணி முதல் 11.30 மணிவரையுள்ள சுபவேளையில் நல்லைக்கந்தனின் திருவருள் துணையோடு எமது நிறுவனத்தின் புதிய காட்சியறையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கு பலவர்ண புத்தம் புதிய டிசைன்களுடன் எமது காட்சியறைக்கு ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
15/2 முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285
கிளை நிறுவனம் :
இல 61, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்)
தொ.இல : 021 49023089, 077 7222524

# மரண தண்டனை விதித்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயார்!

## தமிழ்க் கூட்டமைப்பு அறிவிப்பு



தமிழ் மக்களின் உரிமைக்காகவும் அவர்களது வாழ்வுக்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மரண தண்டனை விதித்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார். அத்துடன், இயலும் என்றால் அவர்கள் அதைச் செய்யட்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றைக் கண்டு ஒரு போதும் அஞ்சாது என்றும் அவர் சொன்னார்.

இலங்கை அரசையும் மீறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.நா உதவிச் செயலரைச் சந்தித்தமைக்காகவும், வெளிநாடுகளில் இலங்கையில் பிரிவினவாதத்தைத் தோற்றவிக்கும் வகையில் பேசியமைக்காகவும் வெளிநாடு சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி நீக்குவதுடன் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்த கருத்துத் தொடர்பாக கூறியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது ,

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பவர்களைக் கைது செய்துதான் அவர்கள் தங்களது அராஜகத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றால் கைது செய்யட்டும். அதற்காக ஒருபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயப்படப் போவதில்லை.

தமிழ் மக்கள் இலங்கையில் இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்ற செய்தியை வெளியுலகுக்கு சொன்னவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான்.

தமிழ் மக்கள் எப்போது தங்களது உரிமைக்காக ஜனநாயக ரீதியாக போராடுகின்றார்களோ அப்போதெல்லாம் சிங்கள இனவாதம் தலைவிரித்தாடிய வரலாறுகள்தான் இருக்கின்றன.

தந்தை செல்வாவின் காலத்தில் அமிர்தலிங்கத்தை கைது செய்தார்கள். பண்டா-செல்வா ஒப்பந்தம் நடந்த வேளையில் அதனைக் குழப்பியவர் ஜே. ஆர். அதன் பின்பு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைந்த வடக்கு, கிழக்கை பிரித்தவர்கள் ஜே.வி.பியினர் தான்.

தமிழ் மக்களுக்கு எப்போதும் தீர்வு கிடைக்கக் கூடாதுதென்பதுடன், அவர்கள் இலங்கையில் ஒரு தேசிய இனம் இல்லை என்று வெளிக்காட்டுவதில் சிங்கள இனவாதிகளும், சிங்களக் கட்சிகளும், பௌத்த பிக்குகளும் முதன்மை வகித்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மை நிலைப்பாட்டை உலகுக்கு எடுத்துச் சொல்கின்றது. கடந்த 30 ஆண்டுகளாக போராடியவர்கள் நாங்கள்.

ஆயுதமேந்தி போராடிய காலம் முடிபடைந்தது. ஜனநாயக ரீதியாக உலகுக்கு உண்மையைச் சொல்லி எமது உரிமையைக் கேட்கின்றோம்.

முள்ளிவாய்க்காலில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக ஐ.நா கூறுகிறது. இதனை முழு உலகமும் பார்த்துக் கொண்டுதான் இருந்தது. ஆனால் எமக்குத் தெரிந்த வரையில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசு இங்கு ஒரு தேசிய இனத்தை அழித்தது என்பதையும் இங்கு இந்த மண்ணில் இன அழிப்பு நடந்தது என்பதை நிரூபித்தது. இங்கு தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழ முடியாது என்ற நிலைப்பாடு உணர்த்தப்பட வேண்டும்.

இதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் அதற்காக அவர்கள் எம்மை கைது செய்து சிறையில் அடைத்தாலும் மரண தண்டனை வழங்கினாலும் பரவாயில்லை. எதற்கும் முகம் கொடுக்க நாம் தயாராகவே இருக்கிறோம் என்றார். (எ-5)

## நிர்வாக குழுக்கூட்டம்

தையிட்டி கலைமகள் கிராம அபிருத்தி சங்கத்தினதும் சன சமூக நிலையத்தினதும் நிர்வாக குழுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வழமையான இடத்தில் நடைபெற உள்ளது. நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறும் நிர்வாக சபை கேட்டுள்ளது. (எ)

## அடிக்கல் நாட்டுவிழா

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன திருப்பணிக்குழு திருஞானசம்பந்தர் ஆதீனத் தலைமைக்கட்டிடத்தை மீள் நிர்மாணம் செய்யும் திருப்பணி இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் இந்து சிரோரத்தினம், மனிதநேயமாமணி வி.கைலாசபிள்ளை தலைமையில் நடைபெறகின்றது. (அ)

## மீள்குடியேற்றக்குழுவின் நிர்வாக சபைக்கூட்டம்

காங்கேசன்துறை, தையிட்டி, ஊறணி மீள்குடியேற்றக் குழுவின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கோண்டாவில் மேற்கு கலட்டி லேனில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களிற்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கலைக்கல்லூரியில் நடைபெறும்.

எனவே அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஆ-2)

## உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு விழா இன்று கொழும்பில்!

### யாழில் இருந்து 222 பேர் பங்கேற்பு

பண்டாரநாயக்க் சர்வதேச மகா நாட்டு மண்டபத்தில் இன்று நடை பெறும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு நிகழ்வில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினைச் சேர்ந்த 222 பேர் பல்வேறு துறை ரீதியாக பட்டம் பெறுகின்றனர்.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினை 157 பேரும், உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) பட்டத்தினை 10 பேரும், உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDIT) பட்டத்தினை 10 பேரும், உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (HNDE) பட்டத்தினை 42 பேரும் உயர் தேசிய வியாபாரக் கற்கை டிப்ளோமா (HNDBS) பட்டத்தினை 05 பேரும் பெறுகின்றனர்.

ஏனைய உயர் தொழில் நுட்பவியல் நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தை சேர்ந்த பெரும்பாலானோர் பட்டம் பெற்று வெளியேறுவது குறிப்பிடத்தக்கது.

இன்று பட்டம் பெறுபவர்களதும் மற்றும் நிறுவனம் தொடர்பான தகவல்கள் மற்றும் கற்கை நெறி தொடர்பான தகவல்களையும் யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க www.jatialumni.org என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் அறிந்து கொள்ள முடியு ம் என யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பழைய மாண வர் சங்க செயலாளர் வ. தயாபரன் தெரிவித்துள்ளார். (எ)

## வாள்வெட்டில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

காணித் தகராறு காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான ம.சண்முகநாதன் (வயது 56) என்பவரே காயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



Commercial Credit PLC,
146/2, யாழ்.வீதி,
நெல்லியடி.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று (07.11.2011) நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறும்
**ராஜா தினேஸ்குமார்**
(HNDA) அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்

(6748)

அந்தண உதவிக்குரு தேவை

மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்திற்கு அந்தண உதவிக்குரு தேவை. தங்குமிடவசதி வழங்கப்படும். (இளம் குடும்பத்திற்கு முன்னுரிமை)
பொருத்தமானவர்கள்:

**விளம்பர இல. சி-4915**
**மே/பா வலம்புரி**
**இல.3, இரண்டாம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு தங்கள் விபரங்களை அனுப்பி வைக்கவும். (சி-4915)

காணி விற்பனைக்குண்டு

துரைவீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலில் 2 1/2 பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
075 0465180
(சி-4920)

வீடு தேவை

1. சேவையை நோக்கமாக கொண்ட எமது பயிற்சி நிலையத்திற்கு வீடு தேவையாக உள்ளது.
2. எமது பயிற்சி நிலையத்தில் கணணிக் கல்வி, ஆங்கிலக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் தங்களது சான்றிதழ்களை இம் மாதம் 15-ம் திகதிக்கு முன்னதாக பெற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
முகாமையாளர்,
லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கணணி பயிற்சி நிலையம்,
27, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P:- 021 4925334
(6729)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்வியின் இலட்சியம் நிறைவேற்றி 07.11.2011 இன்று பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் HNDE பட்டம் பெறும் எமது சகோதரி
**சந்திரமலர் அச்சுதன்**
அவர்களை அன்புடன் பாராட்டி வாழ்த்தும்
அண்ணா றுபேஸ்
அண்ணி சுகன்யா
அக்கா, தம்பிமார்

(6750)

## இன்று ஒரு தகவல்

# இல்லத்தரசிகள்!

ஒருவர் மிகவும் பெருமையாகப் பேசினார் என்னுடைய இல்வாழ்க்கையிலே... "என் மனைவியுடன் ஒரேயொரு தடவைதான் சண்டை போட்டுள்ளேன்!" என்றார்.

"எப்போது?" என்று கேட்டேன். "திருமணம் முடிந்து மறுநாள்" என்றார்.

"அதன்பின்பு சண்டையே வரவில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்று கூறினார்.

"அது எப்படி?" என்றேன்.

"அப்போது ஆரம்பித்த அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே!" என்றார்.

எனக்கு சிரிப்பு வந்தது. ஆனால், அவர் அப்படியல்ல. உண்மையிலேயே இல்வாழ்க்கையை மிகவும் சிறப்பாக நடத்தி வருகின்ற ஒருவர்தான்.

ஒரு குடும்பம் நன்றாக அமைய வேண்டுமென்றால், அது இல்லத்தரசிகளின் கையிலேதான் உள்ளது.

இயற்கையாகவே பெண்களுக்கு என்று சில சிறப்பான குணங்கள் உண்டு.

ஒரு தடவை பவேரிய நாட்டு அதிபருக்கும்; ஜேர்மன் சக்கரவர்த்திக்கும் தகராறு ஏற்பட்டது. ஜேர்மன் சக்கரவர்த்தி என்ன செய்தான்... ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டுபோய் பவேரியவின் தலைநகரை சுற்றி வளைத்தான்.

ஆனாலும் அவனுக்குக் கோபம் அடங்கவில்லை! பவேரிய தலைநகரை தரைமட்டமாக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அச்சமயத்தில் அவனது மனதின் ஓரத்தில் இரக்கம் தலை காட்டியது. உடனே ஒரு அறிவிப்பை விடுத்தான்.

"பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டும் விதிவிலக்கு அளிக்கிறேன். அவரவர்கள் முதுகிலே சுமக்கக்கூடிய அளவு பொருட்களை எடுத்துக்கொண்டு வெளியேறலாம்!" என்று அறிவித்தான்.

அதன்பின், அவனுடைய படைத் தலைவர்களை அழைத்தான்.

"பெண்கள் எல்லோரும் பொருட்களுடன் ஊரை விட்டு வெளியேறியவுடனேயே தலை நகரைக் கொளுத்தி விடுங்கள்!" என்று உத்தரவு பிறப்பித்தான்.

சிறிது நேரத்திலே பவேரிய நாட்டுப் பெண்கள் தட்டுத்தடுமாறி வெளியே வந்து கொண்டிருந்தார்கள்.

சக்கரவர்த்தி இவற்றை எல்லாம் பார்க்கிறார். அவருக்கு அதிர்ச்சி! என்ன நடந்தது...

பவேரிய பெண்கள் முதுகிலே சுமந்து வந்தது... வீட்டுப் பொருட்களை அல்ல. தங்களது கணவர்மார்களையே.

அந்நாட்டு மக்களுக்கு அவர்களது கணவர்களே பெரிதாக இருந்தார்கள்.

கடைசியாக பார்த்தால்... பவேரிய மன்னனை அவனுடைய ராணி முதுகினில் சுமந்து கொண்டு தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தாள்.

ஜேர்மன் சக்கரவர்த்தி இதைப் பார்த்தான். அவனுக்கு மனம் நெகிழ்ந்தது. பவேரியவுக்கு மன்னிப்பு கொடுத்துவிட்டு படைகளை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து விட்டான்.

மனைவியின் பெருமை என்பது இதுதான். இருந்தாலும் இந்தக் காலத்திலேயெல்லாம் அந்தளவுக்கு நடக்குமா என்பது சந்தேகம்தான்.

அது மாதிரியான ஒரு நிலைமை இப்போது ஏற்படுமாகில்... உங்களாலே முடிந்த அளவுக்கு முதுகிலே சுமந்துகொண்டு வாருங்கள் என்று சொன்னால்... பலபேர் தொலைக்காட்சிப் பெட்டியைத்தான் சுமந்து கொண்டு வருவார்கள் என்று நான் நினைக்கிறேன். கூடவே தமது கையடக்கத் தொலைபேசியையும் எடுக்க மறக்கவே மாட்டார்கள்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# வன்னிப் பிரதேச மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த ஆசிரியர்கள் ஒத்துழைப்பு அவசியம்

## வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்தத்தின் பின்னர் வன்னிப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் துன்பங்களின் மத்தியிலேயே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது வருடநிறைவு தேசிய மாநாடு அண்மையில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் அதிகமாக பாதிப்படைந்த பிரதேசங்களாக வன்னிப் பெருநிலப்பரப்பு அமைந்துள்ளது.

இங்கு யுத்தத்தின் பின்பு மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருவதனால் கல்வி நடவடிக்கைக்கு போதியளவு வசதிகள் பாடசாலைகளில் ஏற்படுத்தப்படவில்லை.

குறிப்பாக, வன்னிப்பிரதேசத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வதிவிட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை. இதனால் ஆசிரியர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் இரண்டு வருடத்தில் முழுமையாக பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.

இதுதவிர வன்னிப்பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டியதும் எமது கடமையேயாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் வன்னிப் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கல்வியில் பாரபட்சம் காட்டாது அனைவரும் சமமான கல்வியைக் கற்க வேண்டும்.

இலங்கைத்தமிழர்ஆசிரியர் சங்கமானது பல்வேறு கால கட்டத்தில் ஆசிரியர்களுக்கான சம்பளப் பிரச்சினைகளை தீர்ப்பதிலும் சமத்துவத்தை பேணுவதில் தேசிய ரீதியில் பல வெற்றிகளைக் கண்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதிலும் இந்தச்சங்கம் முனைப்புடன் செயற்படுகின்றது.

இதுதவிர வன்னியில் மாணவர்கள் பொருளாதார ரீதியில் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்து வந்தபோது அவர்களுக்கு உறுதுணையாக இருந்தது இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம்.

எனவே, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு, மாநாட்டில் கலந்து கொண்டது பெருமகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-6)

# சிறுவர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த மற்றும் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.(அ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 130 | 120 |
| தக்காளி | 90 | 80 | 90 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 35 | 60 | 40 |
| கரட் | 110 | 120 | 110 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 35 | 30 | 35 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 20 | 40 | 20 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 70 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 40 | 40 | 40 |
| பீற்றூட் | 15 | 30 | 15 |
| கறிமிளகாய் | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 90 | 40 |
| போஞ்சி | -- | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 110 | 100 | 110 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 20 |
| தேசிக்காய் | 220 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 20 |

# இராசி பலன்

*07.11.2011*
*(ஐப்பசி 21, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*துவாதசி முன்னிரவு 8.21 மணிவரை*
*உத்தரட்டாதி பின்னிரவு12.32 மணிவரை*
*இராகுகாலம் 7.35-9.05 மணிவரை*
*சுபநேரம் 12.05-1.35 மணிவரை*

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், ஆடம்பரப் பொருட்களில் விருப்பம் காட்டுவீர்கள்.

**இடபம்** காலை நேரத்திலேயே இனிய தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களின் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிறர் உதவியுண்டு, தொழில் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், நல்லவர்கள் தொடர்பால் நலம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** பணத் தேவைகள் இறுதி நேரத்தில் தான் பூர்த்தியாகும், உறவினர்களின் மனஸ்தாபத்திற்கு உள்ளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்** நல்ல செய்திகள் உங்களை நாடி வரலாம், அதிகாலையிலேயே விருந்தினர் வருகையுண்டு, அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், உடல் நலம் சீராகும்.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வரவுகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரலாம், தொலைபேசி மூலம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** அரசியல் செல்வாக்கு மேலோங்கும், நேர்மையான நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், செலவுகள் செய்து மகிழும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், சிலர் தொழில் ரீதியாக உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், இளைய சகோதரத்தின் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.


**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலை உயரும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், மாலை நேரப்பயணம் மகிழ்ச்சி தரும், விருந்து விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

வளவன்

# பாலத்தை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)



இருபாலை கட்டைப்பிராய் பாலத்தின் புனரமைப்பு வேலைகள் மந்த கதியில் உள்ளதால் அப்பகுதியில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

மேற்படி பாலம் 750 வீதி அகலமாக்கும் பணி இடம்பெற்று வருவதால் பாலம் புதிதாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதனால் பாலத்தின் வேலை புனரமைப்பு பணி பூர்த்தியடையாத நிலையில் உயிர் ஆபத்துக்களை விளைவிக்க கூடியதாகவுள்ளது.

இப்பாலத்தின் ஒரு பக்கம் வண்ணான் குளமும் மறுபக்கம் பாரிய பாலக்கிடங்கும் கூரிய கம்பிகளும் உள்ளதோடு எச்சரிக்கை அடையாளங்கள் இன்றியும் இப்பாலம் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இப்பாலத்தை விரைவாக புனரமைத்து மக்களின் நலன்களை பாதுகாக்குமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# போக்குவரத்து சேவையை சீராக்க கோரிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சேவை சீரின்மையால் பாடசாலைகளுக்கு உரிய நேரத்திற்கு செல்லமுடியாது சிரமப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கட்டைக்காடு ஆழியவளை பகுதிக்கு சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பேருந்துகள் போதுமானதாக இல்லை எனவும் இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்லாது தாமதித்து செல்வதாகவும் தூர இடங்களுக்கு சென்று உயர்கல்வியை கற்க முடியாதுள்ளதாகவும் மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் மாணவர்களின் கல்வி நலன் கருதி போக்குவரத்து சேவை சீர்செய்து தருமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, கெருடாவில் வீரபத்திரர் கோவில் வீதியானது புனரமைப்பதற்காக ஒரு வருடத்திற்கு முன் கிரவல் பரவப்பட்ட நிலையில் தொடர்ந்து புனரமைப்பு வேலைகள் இடம்பெறாமையால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை உள்ளது.

இவ்வீதியில் பரவப்பட்ட கிரவல் மீது மழைநீர் தேங்கி நின்று பாசி படர்வதால் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த வாரம் இவ்வீதியால் பயணித்த கந்தையா மகாலிங்கம் என்ற வயோதிபர் வீதியில் உள்ள பாசியில் சறுக்கி விழுந்து முதுகெலும்பு முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ் வயோதிபர் ஏற்கனவே மிதிவெடி விபத்தொன்றில் ஒற்றைக் காலை இழந்து செயற்கைக்கால் பொருத்திய நிலையில் உள்ளார்.

மேலும் பல விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன. எனவே இவ்வீதியை தார் வீதியாக புனரமைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு இருவருக்கும் தலா ஐம்பது ஆயிரம் ரூபா அபராதம் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3-24)




# பாசிக் நிறுவனத்தால் உதவிகள்

(பொற்பதி)

பாசிக் நிறுவனத்தினால் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு உட்பட்ட கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, வத்திராயன் ஆகிய கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பயனாளிகள் 100 பேருக்கு கட்டுமரம், மீன்பிடி வலைகள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக அந்தந்த சங்கங்களின் பயனாளிகளின் பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-3-64)

# துவிச்சக்கரவண்டிகள் வழங்குவதற்கு ஏற்பாடு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு 10 துவிச்சக்கரவண்டிகளை வழங்குவதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் உறுதியளித்திருந்தார்.

தொண்டர் ஆசிரியர்கள் போதிய வருமானம் இல்லாமல் தூர இடங்களுக்கு சென்று கல்வி கற்பிப்பதற்கு போக்குவரத்து நெருக்கடி உள்ளதென எடுத்துக்கூறியதற்கிணங்கமுன்னுரிமை அடிப்படையில் துவிச்சக்கரவண்டிகளை வழங்குவதாக குறிப்பிட்டார். (அ-3-10)

# இலங்கை வங்கிக்கிளைகள் திறக்கப்படவுள்ளன

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி மற்றும் மந்திகை ஆகிய இடங்களில் இலங்கை வங்கிக் கிளைகள் அடுத்த வருட முற்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள் குடியேறியதை அடுத்து மக்களுக்கு கடன் திட்டங்கள் போன்ற செயற்பாடுகளை துரிதப்படுத்தவே இக்கிளை திறக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-3-10)

# யன்னல்கள் திருட்டு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் பெறுமதி மிக்க யன்னல்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருதாவது, பூட்டப்படாது பாடசாலை வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த இருபதுக்கும் மேற்பட்ட இரும்பு யன்னல்கள் இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக பிரதேச இராணுவத்தினருக்கும் மருதங்கேணி பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-64)

# விவசாயிகளுக்கு உர விநியோகம்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தினால் இரண்டாம் கட்ட உரவிநியோகம் சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் வழங்கப்படவுள்ளது.

இவ்உரவிநியோகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை கல்வயல் பகுதி விவசாயிகளுக்கும் மாலை வெள்ளாம்போக்கட்டி விவசாயிகளுக்கும் நாளை மறுதினம் புதன் கிழமை காலை மிருசுவில் வடக்கு விவசாயிகளுக்கும் மாலை மிசுவில் தெற்கு, பலாவி விவசாயிகளுக்கும் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சரசாலை வடக்கு விவசாயிகளுக்கும் மாலை நுணாவில் கிழக்கு விவசாயிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை நுணாவில் மேற்கு விவசாயிகளுக்கும் மாலை சாவகச்சேரி நகர் விவசாயிகளுக்கும் மண்டுவில் விவசாயிகளுக்கும் உரவிநியோகம் வழங்கப்படவுள்ளது. (அ-3-29)







யா/கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் சாதனை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பான்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அதிபர் வே.சிவசிதம்பரம் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# தனியார் நிறுவனங்களை அரசுடைமையாக்கும் சட்டத்தை ஐ.தே.க. முழுமையாக எதிர்க்கும்

## ஆர். யோகராஜன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மந்தமாகவோ அல்லது சீராக செயற்படாத வியாபார நிறுவனங்களை அரசுடைமையாக்குவதற்கு ஒரு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமலேயே இரகசியமாக உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பி அங்கீகாரத்தைப் பெற்று அவசர அவசரமாக எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றிக் கொள்ளும் முய ற்சியில் ஈடுபட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் கூறினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இது ஜனநாயகமற்ற ரீதியில் எதிரணியைச் சேர்ந்தவர்களின் தொழில் முயற்சிகளை அரசமயமாக்கி தனது செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் காட்டும் எதிர்ப்புக்களை அடக்கும் வழிமுறைகளாகவே காணப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் அரச நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் கோப் குழு 235 அரச நிறுவனங்கள் தற்போது நஷ்டத்தில் இயங்குவதாகவும் அதன்மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் இழக்கப்படுவதாகவும் இந்த இழப்புக்களை ஈடு செய்வதற்கு பொதுமக்கள் மீது மேலும் மேலும் வரிகள் சுமத்தப்படுவதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

உதாரணமாக ஸ்ரீலங்கா எயார், மிகின் எயார் போன்ற நிறுவனங்கள் பல கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதேபோன்று மக்கள் சேவைக்காக அரசு நடத்தும் நிறுவனங்களான இலங்கை மின்சார சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன பலகோடி ரூபா நட்டத்தில் இயங்குகின்றன.

இந்த நட்டத்தை ஈடு செய்வதற்காக மின்சாரக் கட்டணங்கள், நீர் கட்டணங்கள் மற்றும் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலை உயர்த்தப்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் சரியாக இயங்காத நிறுவனங்கள் எனக்கூறி தனியார் நிறுவனங்களைப் பொறுப்பேற்பதன் மூலம் அவற்றை சீராக நிர்வகிப்பார்களென்ற நம்பிக்கை யாருக்கும் இல்லை.

இந்தச் சட்டம் ஜனநாயகத்துக்கு முரணான அரசியல் பழிவாங்கல் சட்டமாகவே கருதப்படுகின்றது. தற்போது அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ள 36 நிறுவனங்களில் செவனகல சீனித் தொழிற்சாலை மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலை என்பவையும் அடங்கும்.

செவனகல சீனித் தொழிற்சாலை கடந்த வருடம் 200 மில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுள்ள அதேவேளை பெல்வத்த நிறுவனம் 600 மில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த இலாபம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீன வர்த்தகர்களுக்கு சமமாக போட்டியிட்டுப் பெற்ற வெற்றியாகும்.

இதைத்தவிர 20 இற்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு இருக்கின்றன.

அரசின் செயற்பாடு காரணமாக நமது நாட்டுக்கு ஐரோப்பிய சமூகமும் அமெரிக்காவும் ஆடை ஏற்றுமதிக்கு ஜி.எஸ்.பி. சலுகை வழங்காத காரணத்தினால் இந்த ஆடைத் தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குகின்றன. இதேபோன்று 100 இற்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் அரசாங்கம் இவற்றை தனியாரைவிட சிறப்பாகவோ சீராகவோ நிர்வகித்து விட முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இந்த சட்டமூலம் அரசாங்கத்துக்கு எதிரானவர்களைப் பழிவாங்கவும் அரசாங்கத்துக்கு சார்பானவர்களுக்கு சலுகை வழங்கவும் மிக இலகுவாக உபயோகிக்க முடியும். உதாரணமாக எதிரணியைச் சேர்ந்தவருடைய ஒரு நிறுவனத்தை அரசமயமாக்கி குறைந்த நட்ட ஈட்டை வழங்கி அவரைப் பழிவாங்கவும் அரசாங்கத்துக்கு சார்பான ஒருவரின் மூடிக்கிடக்கும் நிறுவனத்தை அரசமயமாக்கி அதிகளவிலான நட்ட ஈட்டை வழங்கி அவருக்கு சலுகை செய்யவும் இது ஒரு அரசியல் ஆயுதமாக அமையும்.


1970 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இதுபோன்ற தனியார் நிறுவனங்களை அரசுடமையாக்க ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பலரையும் பழிவாங்கியது.

அந்த அரசு 1977 ஆம் ஆண்டு படுதோல்வியடைந்த பின் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அந்தச் சட்டத்தை நீக்கி இல்லாமல் செய்தது.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு வெற்றி பெற்று தனியார் நிறுவனங்களை அரசுடமையாக்கி பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

அதேபோன்று இன்று தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெற்று விட்டதாக இனவாதப் போக்கில் பிரசாரம் செய்து பல தேர்தல்களில் வெற்றி பெற்று விட்டதனால் இன்று மீண்டும் தனியார் நிறுவனங்களை அரசுடைமையாக்கி பழிவாங்கும் நடவடிக்கையை இந்த அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இது அவர்களின் ஆணவத்திற்கு அழிவாக அமையும் என்பதை இந்த அரசாங்கம் உணர வேண்டும்.

ஜனநாயகத்திற்கும் தனி மனித உரிமைக்கும் முரணான இந்தச் சட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக எதிர்த்து சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிராக செயற்படும் என்றார். (அ-2)



வலிகாமம் கல்வி வலய மாற்றுவலுவுடைய மாணவர்களும் துணுக்காய் கல்வி வலய மாற்றுவலுவுடைய மாணவர்களும் இணைந்து நடத்திய நட்புறவு முகாம் அண்மையில் மு/யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துணுக்காய் கல்வி வலய, கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபால மங்கள விளக்கினை ஏற்றுவதையும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் பொறுப்பாசிரியர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- மல்லாவிச் செய்தியாளர்)*

# கொழும்பு மாநகர சபையில் ஆளும்- எதிர்க்கட்சிகள் மோதல்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சி நடத்திய கூட்டத்தை அடுத்து பொலிஸாரின் உதவி பெற்றுக்கொள்ளப் பட்டது. இதுவரை காலமும் கொழும்பு மாநகரசபையில் எதிர்க்கட்சி அலுவலகம் என்பது அமைக்கப் படவில்லை.

எனினும் அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்த அலுவலகம் அண்மையில் திறக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஆளும் கட்சியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட அனுமதியின்றி இந்த அலுவலகத்தில் கூட்டத்தை நடத்தியுள்ளார்.

இதனையடுத்து மாநகர முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கறுவாத்தோட்ட பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தமையை அடுத்து பொலிஸார் குறித்த அறையை மூடி அதன் சாவியை மாநகர ஆணையாளரிடம் கையளித்தனர்.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் தமது கூட்டத்தை நிறைவு செய்ததன் பின்னரே குறித்த அலுவலகம் பொலிஸாரினால் மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 5 நட்சத்திர ஹோட்டல் நிர்மாணிக்க தீர்மானம்

## இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் 5 நட்சத்திர ஹோட்டலொன்றை நிர்மாணிப்பதற்கு இராணுவம் திட்டமிட்டுள்ளது. இதற்கென பொருத்தமான காணியை தேடி வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி கூறியுள்ளார்.

அபிவிருத்தி மற்றும் நிர்மாணப் பணிகளுக்காக இராணுவத்திற்குள் தனியான கம்பனியொன்றை வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய அண்மையில் வலியுறுத்தியிருந்தார்.

எனினும் இந்த யோசனை குறித்து தற்போது கலந்துரையாடப்படுவதாகவும் பெரும்பாலும் இதற்காக இராணுவத்திற்குள் தனியாக நிர்வாக சபையொன்று அமைக்கப்படலாம் எனவும் அவர் கூறினார்.

வீடுகள் நிர்மாணம் மற்றும் வீதி நிர்மாணம் உட்பட பல அபிவிருத்தித் திட்டங்களை இராணுவம் மேற்கொண்டதால் அரசாங்கத்திற்கு 300 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான பணத்தை சேமிக்க முடிந்துள்ளது. (அ-2)

# 32 கோடி பெறுமதியான தங்கம், நாணயத்தாள்கள் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்ல முயன்ற 32 கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள்களை கடந்த இரண்டு மாத காலப்பகுதிகளில் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதோடு பலரை கைது செய்தும் உள்ளனர்.

இலங்கை, இந்தியா,பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க பிரஜைகள் பலரே இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் அவர்களில் பலருக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் செலுத்த முடியாதவர்களுக்கு சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டிருப்பதாக சுங்கத்திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (அ-2)


துயர் பகிர்கின்றோம்

வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

(உரிமையாளர்,பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,சங்கானை, தரன்ரேடர்ஸ், ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்)
பணிப்பாளர்- JET STEELE (PVT)LTD, OLD MOOR STREET,COLOMBO-12




எங்கள் மாமாவின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம்.
எங்கள் மாமாவின் மறைவு எங்கள் எல்லோருக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.
அவரின் இழப்பால் துயருறும் எங்கள் மாமாவின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் மாமாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருமக்கள்
ச.தயாபரன் (டுபாய்), ச.கேசவன் (France), ச.யாதவன் (France)

(6730)

# இரகசியங்களை அம்பலப்படுத்தியது விக்கிலீக்ஸ்

# அதன் மூலமாக எதிர்ப்பையும் சம்பாதித்தது



உலக அளவில் ஊடகங்களின் மீது ஆதிக்க அரசுகளின் வன்முறை எப்போதும் தொடர்கிறது! இதற்கு லேட்டஸ்ட் உதாரணமாக அளவில் மிகவும் பிரபலமான விக்கிலீக்ஸ் தனது விவகாரங்களை நிறுத்திக் கொள்ள இருப்பதாக தெரிவித்து இருக்கிறது!

ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கப் படைகள் நடத்திய கோரத் தாண்டவத்தைப் பற்றிய ஆவணங் கள் தொடங்கி குவாண்டனாமோ சிறையில் நடக்கும் அட்டூழியங்கள் வரை வெளியிட்டு ஆதிக்க வல்லரசுகளின் நடத்தையை விவாதத்துக்கு உள்ளாக்கியது விக்கிலீக்ஸ். அதன் மூலமாக எதிர்ப்பையும் சம்பாதித்தது. விக்கிலீக்ஸின் முக்கிய நோக்கம் செய்திகளையும் தகவல்களையும் அரசு ஆவணங்களையும் தணிக்கையின்றி வெளியிடுவதுதான். அவற்றைக் கொடுத்த சாட்சியாளர்கள் யார் என்பதையும் அறியவே முடியாதபடி தனக்கென்று ஒரு வடிவ மைப்பைக் கொண்டது அந்த வலைத்தளம்.

இப்படி ஒரு தளத்தை ஆரம்பித் தவர் ஜூலியன் அசேஞ்ச். 'ஒவ்வொரு மனிதனுக்கும் தனது கருத்தைப் பதிவு செய்வதற்கான உரிமையை வழங்க வேண்டும்' என்ற சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தைத் தூக்கிப் பிடித்து ஊடக உலகின் முக்கிய மனிதராகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட இவர் மீது பல வழக்குகள் பல நாடுகளில்! ஆவணங்களை இவர் வெளியிட்ட

ஆரம்பித்த போது 'அவை போலியானவை' என்று அரசுகள் அறிவித்தன. ஆனால், அடுத்தடுத்து மூல ஆதாரங்களுடன் மேலும் செய்திகள் வெளியாகவே... நிலைமை எல்லை மீறிப் போவதை உணர்ந்த அரசுகள், 'இரகசியங்களை வெளியிட்டு விட்டார்கள்' என்று குற்றம் சாட்டி வழக்குகள் தாக்கல் செய்தன. அந்தத் தருணங்களில் எல்லாம் 'அரசின் தவறுகள் மற்றும் மக்களை ஏமாற்றி மறைக்கும் ஆவணங்களை வெளியிடுவதில் எந்தத் தவறும் இல்லை என்று ஒட்டுமொத்த ஊடக மையங்களும் கொந்தளித்தன. எனவே, விக்கிலீக்ஸுக்கு அதில் வெற்றி கிடைக்கவே... பின்னர் அசேஞ்ச் மீது கற்பழிப்பு வழக்கு ஒன்றும் பதியப்பட்டது. இதன் மூலம் அவரது ஒழுக்கத்தைக் கேள்விக்குறியாக்கி அதை வைத்தே அவர் வெளியிட்ட ஆவணங்களையும் கேள்விக்கு உள்ளாக்கலாம் என்று நினைத்தனர். ஆனால், அந்த

அந்தத் தளத்துக்கு 95 சதவிகிதம் வருவாய் இழப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவின் முக்கிய நிதி பரிமாற்றச் சேவை அமைப்புகளான மாஸ்டர்கார்ட், பேபால், வெஸ்டர்ன் யூனியன், விசா, பாங்க் ஒப் அமெரிக்கா போன்ற நிறுவனங்களுக்கு உலகின் எந்தப்பகுதியில் இருந்தும் விக்கிலீக்ஸ் தளத்துக்கு நன்கொடை சென்று சேராதபடிக்கு பார்த்துக் கொள்ள உத்தரவு சென்றதால் முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது! இந்த நிலையில் இந்த நிதி முட்டுக்கட்டையை உடைக்காவிட்டால் சில மாதங்களில் விக்கிலீக்ஸ் தளத்தை மூட வேண்டும். இன்னும் ஒரு இலட்சம் இரகசிய கேபிள்கள் கசியவிடப்பட தயாராக இருக்கின்றன. ஆனால் அவற்றை இயக்க எங்களுக்கு அடுத்த 12 மாதங்களுக்கு 35 மில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்றன என்ற வருத்தத்தோடு சொல்லியிருந்தார் அசேஞ்ச்.

அதையடுத்து ஒரு நிதிப் பரிமாற்றச்

பீஸ், அம்னெஸ்டி இன்டர்நஷனல் போன்ற அமைப்புகள் இருக்கின்றன. அவற்றுக்குத் தேவைப்படும் நிதியுதவிகளை ஏன் நிறுத்தவில்லை.

நியூயோர் டைம்ஸ், தி கார்டியன், லே மாண்டே போன்ற தின இதழ்களுடன் சில சமயம் கூட்டு வைத்துக் கொண்டு அவர்களின் ஆதரவோடு பல ஆவணங்களை வெளியிட்டிருக்கிறது விக்கிலீக்ஸ். தவிர, விக்கிலீக்ஸ் தளத்தில் வெளிவந்த பல ஆவணங்களை மேற்கண்ட தினஇதழ்களும் மறுவெளியீடாகப் பிரசுரித்து இருக்கின்றன. அரசு இரகசியங்களை விக்கிலீக்ஸ் வெளியிடுவது தவறு என்று முடக்கினால் இதே விதி அந்த தின இதழ்களுக்கும் பொருந்துமே! அவற்றின் மீது அமெரிக்கா ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என்று பலராலும் கேள்விகள் முன் வைக்கப்படுகின்றன.

இதற்கிடையில் தனக்குத் தேவையான நிதியைத் தானே ஏற்படுத்திக்

## முடக்கப் பார்க்காதே... வேதனையில் விக்கிலீக்ஸ்!

வழக்கில் ஜாமீனில் வந்தார் அசேஞ்ச்.

கற்பழிப்பு வழக்குத் தொடர்பாக அவர் லண்டனில் கைது செய்யப்பட்டபோதும் செய்திகள் விக்கிலீக்ஸில் தொடர்ந்தபடிதான் இருந்தன. இந்தத் தளத்தில் அசேஞ்ச் தவிர உலகம் முழுவதும் சுமார் 800 பேருக்கும் மேல் தங்களின் கடமையைச் சிரத்தையுடன் செய்து வந்தனர். ஆனால், இன்றைய திகதிவரை அசேஞ்சின் முகம்தான் மக்களுக்குத் தெரியும். இதுவரை விக்கிலீக்ஸ் தளப் பணியாளர்கள் யாரையும் எந்த அரசும் கைது செய்யவில்லை. அசேஞ்ச் மீது போடப்பட்ட கற்பழிப்பு வழக்கில் கூட, இதுவரை உண்மைநிலை தெரியவில்லை.

இப்படியே விட்டால் விக்கிலீக்ஸை எதுவும் செய்ய முடியாது என்கிற நிலையில்தான் அந்தத்தளத்துக்கு வரும் நன்கொடைகளைத் தடுத்து நிறுத்தியது அமெரிக்கா. விக்கிலீக்ஸ் பெரும்பாலும் தனக்கு வரும் நன்கொடைகளின் மூலமாகத்தான் செயற்பட்டு வருகிறது. இது தடைப்பட்டதால்

சேவை நிறுவனம் தனக்கு எதிராக அல்லது தன்னுடைய அரசுக்கு எதிராகச் செயற்படும் இன்னொரு நிறுவனத்துக்கு வரும் நன்கொடைகளை

கொள்ளும் முயற்சியில் இறங்கி இருக்கிறது விக்கிலீக்ஸ். சமீபத்தில் தன்னிடம் உள்ள முக்கியமான சில பொருட்களை ஏலம் விட்டிருக்கிறார் அசே

**அதிரவைக்கும் தண்டனை!**

இரண்டு சுவீடன் நாட்டுப் பெண்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று சுவீடன் நாட்டு நீதிமன்றத்தில் ஜூலியன்மீது வழக்குத் தொடரப்பட்டது. அத னால் லண்டனில் இருந்தபோது, கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார். அந்த வழக்கு லண்டன் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு அவரை சுவீடனுக்கு நாடு கடத்த உத்தரவிடப்பட்டு விட்டது. அந்தப் பெண்களின் அனுமதியுடன்தான் ஜூலியன் அசேஞ்ச் நடந்து கொண்டார் என்று சொன்னதை இங்கிலாந்து நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. அசேஞ்ச் இனி இங்கிலாந்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம் என்றாலும் அவர் நாடுகடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது என்கிறார்கள். ஆனால் இதனை விக்கிலீக்ஸ் தளத்தை முடக்கும் இன்னுமொரு முயற்சியாகத்தான் மனித உரிமை ஆர்வலர்கள் பார்க்கிறார்கள்.

முடக்குவதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அல்லது அரசுக்கு எதிரான அந்த நிறுவனம் தன்னுடைய விசுவாசிகளிடத்தில் போய் கையேந்துவதைத் தடுக்க என்ன உரிமை இருக்கிறது?

விக்கிலீக்ஸ் தளத்தைக் காட்டிலும் அமெரிக்க அரசுக்கு பாதகமாக கிரீன்

ஞ்ச். இதன்மூலம் அவர் எதிர்பார்த்த நிதி வந்தால் உலகை அதிரவைக்கும் அடுத்தடுத்த ஆவணங்கள் விக்கிலீக்ஸில் கசியப்போவது உறுதி என்கிறார்கள்.

ஜூனியர் விகடன்

# நீரிழிவு தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பெருகி வரும் நீரிழிவு நோயைக் கட்டுப் படுத்தும் நோக்கில் யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவானது குடாநாடு தழுவிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடத்தவுள்ளது.

இதற்கமைய பாடசாலைதோறும் சிறார்களுக்கு நீரிழிவு தடுப்பு சம்பந்தமான அறிவூட்டல் நிகழ்வுகள் பொது நிறுவனங்களில் நோயின் தாக்கத்தை குறைப்பது சம்பந்தமாக பொதுமக்களை அறிவூட்டல், இலவச குருதிப் பரிசோதனை, வியாபார நிறுவனங்களில் இந்நோய் தொடர்பான விளக்கம் வைத்தியசாலைகளின் சுற்றாடல் கள்தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபயணங்கள் ஆகியன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளை முன்னெடுக்க விரும்பும் பாடசாலைகள், பொது நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள் என்பன யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தை அணுகுவதன் மூலம் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது 021 222 0175 என்ற தொலைபேசி இலக்கத்தினை அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மின்தடை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனால் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப்பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (2)

# 25 இலட்சம் காசநோயாளர்களுடன் இந்தியா முதலிடம் வகிக்கின்றது

## உலக சுகாதார அமைப்பு தகவல்

(புதுடில்லி)

உலக சுகாதார அமைப்பு உலக காச நோய் கட்டுப்பாடு - 2011 என்னும் தலைப்பில் சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது,


உலக சுகாதார அமைப்பு சார்பில் உலக அளவில் காசநோயாளிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கடந்த ஆண்டில் 88 இலட்சம் நோயாளிகளின் பெயர்கள் இந்த அமைப்பில் பதிவு செய்யப்பட்டன.

காசநோயாளிகள் எண்ணிக்கையில் 25 இலட்சம் பேருடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அடுத்தபடியாக 12 இலட்சம் நோயாளிகளுடன் சீனா 2 ஆம் இடம் வகிக்கின்றது.

தென்னாபிரிக்காவில் 59 ஆயிரம் பேரும் இந்தோனேசியாவில் 54 ஆயிரம் பேரும் பாகிஸ்தானில் 48 ஆயிரம் பேரும் காசநோய் பாதிப்புக்கு ஆளாகி இருக்கின்றனர். இந்தியாவை விட பல துறைகளிலும் பின் தங்கியுள்ள பாகிஸ்தான் இந்த விடயத்தில் பரவாயில்லை என்ற நிலையில் உள்ளது.

இந்தியாவில் பெரிய அளவிலான உயிர்கொல்லி நோயாக காசநோய் இருந்து வருகின்றது. தினமும் ஆயிரம் பேர் வரை இந்நோய்க்கு பலியாகின்றனர். புகையிலை பயன்பாட்டுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பது, பொது இடங்களில் புகைப்பிடிக்க தடைவிதிப்பது, புகையிலை பொருட்களின் பயன்பாட்டை குறைக்க அவற்றின் மீது அதிகவரி விதிப்பது போன்ற நடவடிக்கைகள் காசநோயை கட்டுப்படுத்த உதவும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 20

## இயற்கையும் மனிதநல வாழ்வும்

மனிதனும் இயற்கையும் தனித் தனியானவையல்ல. நமது உயிர் இயற்கையோடு சம்பந்தப்பட்டது தானே. இரண்டையும் தனித் தனியாக பிரித்துப் பார்ப்பதால்தான் மனித குலத்திற்குப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இயற்கை இரண்டு விதமாய் உள்ளது. ஒன்று பொருள் தன்மைக்கு சம்பந்தப்பட்ட இயற்கை. இன்னொன்று உள்த் தன்மைக்கு சம்பந்தப்பட்ட இயற்கை. இந்த இரண்டு வகையான இயற்கை யுடன் மனிதன் இணைந்திருக்கும் போதுதான் அவன் வாழ்க்கையை சமநிலையில் ஆனந்தமாய் வாழ வாய்ப்பிருக்கிறது.

காப்பாற்ற வேண்டும் எண்ணம் வந்திருக்கிறது. இயற்கையை நாம் காப்பாற்ற வேண்டியதில்லை. இயற்கையின் மடியில்தான் நாம் இருக்கிறோம. மனிதனின் செயல் இயற்கைக்கேற்ப நடந்திருந்தால் அதைக் காப்பாற்றுவதற்கான தேவை ஏற்பட்டிருக்காது. இயற்கை எப்படி இருக்கிறதோ அப்படித்தான் நம் வாழ்க்கையும் இருக்கும். எனவே வேகத்தினை அதிகப்படுத்துவதற்காக ஏற்படுத்திய தொழில் நுட்பங்கள் எல்லாம், நமக்கும் நாம் வாழும் பூமிக்கும் எதிர் மறையாக சென்று விட்டதால், இயற்கையைக் காப் பாற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. மனிதன் இயற்கை யோடு ஒன்றிணைந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

விஞ்ஞானங்களும் தொழில்



தற்போது வெளிச் சூழலில் இருக்கிற இயற்கை பற்றிப்பேச வேண்டிய தேவையுள்ளது. ஏனென் றால், வெளியே உள்ள இயற்கை யோடு தொடர்பு கொள்ளாமல், இயற்கையை அழித்து வந்திருக்கி றோம். தற்போது இயற்கையைக் நாம் செய்யும் செயல்கள், இயற் கைக்கு ஏற்றாற்போல் இருக்க வேண்டும்.

தொடக்கத்தில் நாம் உருவாக்கின தொழில் நுட்பங்கள் இயற்கைக்கு எதிர்மறையாகவே இருந்தன. காலம் செல்லச்செல்ல நமது செயல் நுட்பங்களும் இயற்கையிலுள்ள பலவற்றின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இயந்திரத் தொழில் நுட்பமாய் இருந்தாலும், மின்சாரமாக இருந்தாலும் மின்ன ணுவாக இருந்தாலும் இவையெல் லாமே இயற்கையில் இருப்பவை தான். நமது உடலிலேயே அவை உள்ளன. ஒரு இயந்திரமாகப் பார்ப்பதானால், நம் உடலைப் போல ஒரு இயந்திரம் இதுவரை உருவாக்கப்படவில்லை. மிக உயர்ந்த நிலையில் இந்த உடலின் மின் இணைப்பு உள்ளது. மின் னணு அமைப்பும் உள்ளது. மிக உயர்ந்த நிலையில் இந்த உடலில் தகவற் தொழில் நுட்பமும் உள் ளது. வெளி சூழ்நிலையில் எதை யெல்லாம் நாம் கண்டு பிடித்துப் பயன்படுத்திக் கொண்டிருக்கி றோமோ, அதன் அடிப்படை இயற்கையில் ஏற்றகனவே இருப் பதுதான்...

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# சங்கீதத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

06

இவ்வகை சிறப்பு மிக்க தேவாரப் பதிகங்களும் அவற்றின் பண்ணமை திகளும் இடைக்காலத்தில் போற்று வாரின்றிஅருகிய நிலையில் முதலாம் இராஜசோழன் திருநாரையூர் நம்பி யாண்டார் நம்பி என்பவரின் துணை கொண்டு தில்லையில் பதிகங் களைத்தேடி தொகுத்து முறைப் படுத்தியமையால், அவ்வரசனும் திருமுறை கண்ட சோழன் எனப் பெயர் பெற்றான் என்பது வரலாறு. இம்மன்னன் திருவெருக்கத்தம் புலி யீரில் திருநீலகண்டன் யாழ்ப்பாண மரபில் பிறந்த இசைத்துறையில் வல்ல பாடினி ஒவரை கொண்டு இப்பதிங்களுக்குரிய பண்முறை களை அடியொற்றி இசை வகுக்கச் செய்தனர்.

சங்ககாலத்தில் உலகியலைப் பற்றி கூறிய இசைப் பல்லவர் ஆட்சிக்காலத்தில், பக்தி இசையாக மாறியது. நாயன்மார்கள் இசையைத் தெய்வ வழிபாட்டுடன் இறுகப் பிணைந்தனர். சம்பந்தருக்கு பொற்றாளம கிடைத்த வரலாற்றைப் பார்க்கும்போது தெய்வீகத்தாளத் துடன் பாடப்பட்டது தெரிய வரு கிறது. பன்னிரு திருமுறைகளும் நாலாயிரம் திவ்ய பிரபந்தங்களும் எமக்குக் கிடைத்த பழமையான இசை நூலாகும். இந்திய சங்கீதத் தின் இராக தாளத்துடன் கிடைத்த பழமையான உருப்படி தேவாரங் களாகும். 'இது சங்கீத வளர்ச்சி அக்காலத்தில் அடைந்திருந்த சிறப்பு நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

இதனைவிடக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் மதங்க முனிவர் மிருகத் தேசி என்னும் சங்கீத கிரந்தத்தின் வாயிலாக இராக பக்தியை விளக்கு கின்றார். இந்நூலில் இராகத்திற்கு பெருமளவு முக்கியத்துவம் கொடுக் கப்பட்டிருந்தது என்பதை வாக்கேய காரர்களால் ஆங்காங்கே குறிப்பிடப் பட்டிருந்தது. இராக பக்தியின் தந்தையென்ற சிறப்புப் பெயரை இவர் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்க தாகும். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் நாரதரால் சங்கீத மகரந்தம் எனும் இலட்சண கிரந்தம் எழுதப்பட் டுள்ளது. இந்நூலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

12 ஆம் நூற்றாண்டின் ஜயதேவர் எழுதிய கீதகோவிந்தம் எனும் பல தரப்பட்ட நுட்பங்களை மேலும் அறியக்கூடியதாக இருந்தது. உருப் படிகள் பக்திமார்க்க, சிறுங்கார மார்க்க உருப்படி வகைகள் பாவத் திற்கும் மனித உணர்ச்சியைத் தூண்டி விடுவதற்கும் ஏற்றதாக இந்நூல் அமைந்துள்ளது. "பதங்கள்", போன்ற ஒரு வகையான உருப்படிகளை இதில் நாம் காணக்கூடியதாக இருந்தது. ஷேத்ரக்ஞர் பதங்கள் இயற்றுவதற்கு இக் கீதகோவிந்தம் முன்னோடியாக இருந்திருக்கலாம் என இசை வல் லோர் கூறுகின்றார்கள். இதன் பின் சாரங்கதேவரால் இயற்றப்பட்ட சங்கீத ரத்னாகாரம் எனும் நூல் 13 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பிரசித்த மாகியது. இந்நூலை இசைக்கென்று வெளிவந்த முதல் நூலாக கருதிக் கொள்கிறார்கள். சாரங்கதேவர் இந்நூலை 7 அத்தியாயங்களாக வகுத் துள்ளார். இதில் நாதம், ஸ்வர வித்தியாசம், இராகப்பிரிவுகள், தாள விளக்கம், வாத்திய விளக்கம், காபககுணதோசங்கள் போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன. 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட சங்கீத ஸீதாகரம் எனும் நூலில்தான் முதன் முறையாக இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட இருபிரிவுகள் பற்றிக் குறிப்புக் காணப்படுகின்றது. அவை

1.கர்நாடக இசை

2.ஹிந்துஸ்தானிய இசை

14 ஆம் நூற்றாண்டிற்கு முன் இந்தியா முழுவதும் ஒரே சங்கீதமே

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

வழக்கத்திலிருந்தது. 14 ஆம் நூற் றாண்டில் வடக்கில் முஸ்லிம் மன் னர்களின் ஆதிக்கம் இருந்த காலத்தில் பாரசீகம், அரேபியா போன்ற நாடு களில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்ததன் காரணமாக வட இந்தியாவில் ஏற் கனவே இருந்த சங்கீத முறை மாறு தல் பெற்றது. ஆனால், தென்னிந்தி யாவில் பூர்வீக முறையே பின்பற் றப்பட்டு வந்தது. வட இந்தியாவில் கலந்த இந்திய சங்கீதம் ஹிந்துஸ் தானி சங்கீதம் எனவும் பூர்வீக பத்தியை தொடாந்து பேணிய சங்கீதம் கர்நாடக சங்கீதம் எனவும் வழங்கலாயிற்று.

கி.பி.15 ஆம் நூற்றாண்டின் தாளப்பாக்கம் சின்னையாவும் அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 20 ஆயிரம் கீர்த்தனைகளும் உற்சவம் பிரநாயக்க கீர்த்தனைகளும் இயற்றி பஜனை பக்திக்கு வழி வகுத்தனர். தாளப் பாக்கம் சின்னையா பஜனை பக்தி யின் தந்தையாவார். தாளப்பாக்கம் அன்னம்மாச்சாரியாரின் அத்யாத்ம சங்கீர்த்தனங்களில்தான் முதன் முதலில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தி

**திருமதி மலர்விழி கனகசபை**

யாசங்களைக் காண்கிறோம். இவரு டைய பேரனாகிய தாளப்பாக்கம் சின்னையாவின் கிருதிகளிலும் பின் புரந்தரதாசரின் கிருதிகளிலும் அனு பல்லவி என்னும் அங்கத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது.

(தொடரும்)

# த.தே.கூ. வெளிநாடு செல்லக்கூடாதெனின் தமிழர் பிரச்சினையை தீருங்கள்!

## எமது நம்பிக்கைக்கு அரசு துரோகம் இழைத்துவிட்டது என்கிறார் அரியநேத்திரன் எம்.பி

(கொழும்பு)

**அமெரிக்கா சென்றிருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர்களை கைது செய்ய வேண்டும் என ஹெல உறுமய கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன் வைத்துள்ளது. இலங்கை அரசாங்கம் முடியுமென்றால் கூட்டமைப்பு தலைவர்களை கைது செய்து பார்க்கட்டும். அப்படி கைது செய்வார்கள் என்றால் அது தமிழ் மக்களுக்கு வெற்றியாக இருக்கும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் குறித்தும் பேச்சுவார்த்தை குறித்தும் கருத்துக்களை வெளியிட்டும் ஹெல உறுமய போன்ற சிங்கள கட்சிகள் அமெரிக்கா சென்றிருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை கைது செய்ய வேண்டும் என அரசிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

நாங்கள் கூறுகின்றோம். முடிந்தால் அரசாங்கம் அவர்களைக் கைது செய்து பார்க்கட்டும். அப்படி கைது செய்வார்கள் என்றால் அது தமிழ் மக்களுக்கு கிடைத்த வெற்றியாகத் தான் இருக்கும். ஏனென்றால் இந்த நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைவர்களுக்கே வெளிநாடு சென்று தங்களின் கருத்துக்களை தெரிவிக்க முடியாது என்றால் சாதாரண மக்களின் நிலை எப்படியிருக்கும் என்பதை அமெரிக்கா போன்ற நாடுகள் உணர்ந்து கொள்ள கூடியதாக இருக்கும். எனவே கைது செய்ய வேண்டும் என்ற பூச்சாண்டி வார்த்தைக்கெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயப்படாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அமெரிக்கா அழைத்துப் பேசுவதற்கு காரணமே இலங்கை அரசாங்கம் தான். இன்று வரை போன பஸ்சிற்கு கையைக்காட்டும் நிலையில் தான் அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா ஏன் தமிழ்த் தேசியக் கூட்மைப்பை அழைக்க வேண்டும். அதற்கான காரணம் என்ன? என்பதை அரசாங்கம் முதலில் ஆராய வேண்டும். கடந்த காலங்களில் ஆயுதப் போராட்டம் உருவாகுவதற்கும் காரணம் இந்த அரசாங்கம்தான்.

தந்தை செல்வாவின் அகிம்சை போராட்டத்தை அப்போதே ஏற்றுக் கொண்டு தமிழர்களுக்கான ஒரு அரசியல் தீர்வை முன்வைத்திருந்தால் அதன் பின் ஒரு ஆயுதப் போராட்டம் ஏற்பட்டிருக்கப் போவதும் இல்லை. தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டிருக்கத் தேவையும் இல்லை. அமெரிக்கா போன்ற நாடுகள் எங்களை அழைத்திருக்கவும் தேவையில்லை. அரசுடன் நடந்த கடந்த 12 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை அரசாங்கம் தரும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் மிகுந்த இதயசுத்தியுடன் கலந்து கொண்டோம். ஆனால் தமிழ் மக்களையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் அரசாங்கம் ஏமாற்றிவிட்டது.



இதன் காரணமாகத்தான் அமெரிக்கா போன்ற நாடுகள் எங்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இலங்கையில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட தமிழர்களுக்கான கட்சியென்ற வகையில் எங்களை வெளிநாடுகள் அழைக்கும் போது நாங்கள் அங்கு சென்று தமிழர்களின் அவலங்கள் பற்றி எடுத்துக் கூற வேண்டியது எங்களது கடமையாகும். அதை விடுத்து பாராளுமன்ற கதிரைகளை அலங்கரித்துக் கொண்டு இருப்பதற்கு நாங்கள் தயாராகவில்லை.

வாக்களித்த தமிழ் மக்களுக்கு பதில் கூற வேண்டிய கடமை எங்களுக்கு உண்டு. எனவே கைது செய்வோம் என்ற பூச்சாண்டி வார்த்தைகளையெல்லாம் விட்டு விட்டு தெருச் சண்டியனைப் போல் கூச்சலிட்டுக் கொண்டிருக்காமல் மீண்டும் எங்களை அமெரிக்கா அழைப்பதற்கு முன் இனியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளுக்கு செல்லக் கூடாது என்றால் உடனடியாக தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வையுங்கள் என்றார். (அ-2)

## ஜனாதிபதி மஹிந்த மாலைதீவு பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். மாலைதீவின்ஆந்ரா தீவுகளில் நடைபெறவுள்ள 17 ஆவது சார்க் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் நாளைய தினம் இந்த விஜயத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

எட்டு நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலைதீவில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டிற்கு இலங்கை விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றமை விசேட அம்சமாகும். (அ-2)

## பிரதேச சபையின் தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்றுறை பிரதேச சபையின் முதலாவது சபைக்கூட்டம் கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதில் ஊர்காவற்றுறை பிரதேச சபை நிதி மூலமும் மக்களின் பங்களிப்புடனும் நூறு வீதி விளக்குகள் பொருத்துதல், குளங்கள் புனரமைப்புச் செய்தல், சோலை வரி அறவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விலை மதிப்பீடு மேற்கொள்ளல் மற்றும் அட்டவணைப் படுத்தப்படாத பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவது போன்ற தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் தேசிய மட்டத்தில் உடற் பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களை பாராட்டுவதற்கான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டதாக பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.(அ-2)

## கட்டுரைப்போட்டி முடிவுகள்; பரிசளிப்பு விழா இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு அனுசரணையுடன் UR Friend Foundation நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக் கான கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்களுடன் ( பாடசாலைசீருடையில்) அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

இதில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு (தரம் 6,7,8)**

இ.சங்கீர்த்தனா(கிளி/ உருத்திரபுரம் மகா வித்தி), அ.பஸ்மியா (யா/ ஊரெழு கணேசா வித்தி), ஜா.மாதங்கி (யா/ வேம்படி உயர்தரப் பாடசாலை),ர.மோனிகா (கிளி/பூநகரி மகா வித்தி), பிரான்சிஸ் றொபேசன் (கிளி/பாரதி வித்தி), அ.அன்ரனி றொபின்சன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), ச.பிரவீன் டானியேல் (மன்/பரிகாரிகண்டல் அ.த.க.பா), ம.மேரி லோஜினி (யா/ கோப்பாய் மகா வித்தி), பா.வேணுகா ( யா/ தொல்புரம் விக்கினேஸ்வரா கல்லூரி), ச.லக்சிகா(யா/ ஊரெழு கணேசா வித்தி)

**இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**

உ.தேனுகா (யா/ வேம்படி உயர்தரப் பாடசாலை),அ.வேஜினி பிகுறாடோ (மன்/புனித லூசியா மகா வித்தியாலயம்), மா.தனுஜா (யா/ இராமநாதன் கல்லூரி),ற.அட்சரன்(யா/புனித பத்திரிசியார் கல்லூரி),த.விஜேந்தினி (வவு/ விபுலானந்தாக் கல்லூரி), ம.சனுதியா (யா/ ஊரெழு கணேசா வித்தி), சி.புருசோத் (யா/ யாழ். இந்துக் கல்லூரி), ச.றமேஸ் ( கிளி/ முட்கொம்பன் அ.த.க.பா), சி.திலக்சனா(யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி), க.லறினா (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி). (அ)

## போதைப்பொருள் வர்த்தகர்களின் பின்னணியில் அரசியல்வாதிகள்

கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் கடந்த தினங்களாக போதைப்பொருளை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இதன்போது பலர் கைது செய்யப்பட்டதுடன் போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்தப் பணிகளில் இலங்கையின் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் இந்த நடவடிக்கையின் போது முக்கிய குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று லங்கா ருத் தெரிவித்துள்ளது.

அரசியல்வாதிகளின் கீழ் இயங்கும் பல போதைவஸ்து வியாபாரிகள் தமது நடவடிக்கையின் போது பாதுகாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே நேர்மையான ரீதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.(அ-2)


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்

**ஊடகவியல் குறுங்காலப்பயிற்சி IV**

**புகைப்பட இதழியல்**

**PHOTO JOURNALISM**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஊடகத்துறை சார்ந்தோருக்காக புகைப்பட இதழியல் துறையில் குறுங்காலப் பயிற்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

நவம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை பயிற்சி நடைபெறும்.

யார் பயிற்சியில் பங்கு பற்றலாம்?

- செய்தி இதழ் ஆசிரியர்கள்
- அலுவலக மற்றும் பிரதேச செய்தியாளர்கள்
- சிறு சஞ்சிகை ஆசிரியர்கள்
- பருவகால பத்திரிகைகளில் பணிபுரிவோர்
- பாடசாலைகளில் ஊடகக் கல்வி ஆசிரியர்கள்

- பயிற்சிக்கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகளை வழங்குபவர்

**துஸ்யந்தி கனகசபாபதிப்பிள்ளை**

(இலங்கையின் பிரபல ஊடகவியலாளர் மற்றும் அனுபவம் வாய்ந்த புகைப்பட இதழியலாளர்)

பயிற்சி விரிவுரைகளையும், செயன்முறைப் பயிற்சிகளையும், புகைப்படக் கண்காட்சியையும் உள்ளடக்கியதான 30 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும்.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் நவம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னதாக நேரடியாகவோ, தொலைபேசியூடாகவோ பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**தொடர்பு முகவரி:**
**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்,**
**இல. 84 ஜும்மா பள்ளி லேன்,**
**யாழ்ப்பாணம் (வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகாமையில்)**
**தொலைபேசி இல. 021 222 9873**
**மின்னஞ்சல் :- directormrte@ gmail.com**

பதிவாளர்
04.11.2011

(சி/4901)

# இலங்கையின் தொழிற்சங்கங்கள் அரசியல் பின்புலத்துடன் இயங்குகின்றன

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் தொழிற்சங்கங்கள் அரசியல் பின்புலத்துடன் இயங்கி வருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் தொழிற்சங் கங்கள் சுயாதீனமாக இயங்கி வருவதாகவும் இலங்கையில் அவ்வா றான ஓர் நிலைமை கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீசினால் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அநேகமான இலங்கைத் தொழிற்சங்கள் அரசியல் நோக்கங்களை முதனிலைப்படுத்திச் செயற்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காரணத்தினால் முன்னர் சம்பள உயர்வு வழங் கப்படவில்லை எனவும் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் காரணமாக சம்பள உயர்வு வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# சர்வதேச 600 அரச சார்பற்ற நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இலங்கையில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரச சார் பற்ற நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இதனை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனங்கள் நிதியின்மை காரணமாகவே மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சுமார் ஆயிரத்து 300 அரச சார்பற்ற நிறுவனங்கள் தம்மை பதிவு செய்துள்ளன.

இதற்கிடையில் உரிய நடைமுறைகளை பின்பற்றத் தவறிய பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டதாகவும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# சட்டத்தை மீறிய கனரக வாகன சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது

(கொழும்பு)

போக்குவரத்து சட்டங்களை மீறும் வகையில் பயணித்த 95 கனரக வாகன சாரதிகளுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நுகேகொட பிரிவு ஹங்வெல்ல, நவகெமுவ, அத்துருகிரிய மற்றும் தரங்கம ஆகிய பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது டிப்பர் வாகனங்களும் லொறிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

போக்குவரத்து விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றாது பயணித்த கனரக வாகன சாரதிகளுக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

# பல்கலை.மாணவர்களுக்கு தொழிற் பயிற்சிகள்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு பட்டப்படிப்பிற்கு புறம்பாக தொழில் பயிற்சிகளையும் வழங்குவதற்கு உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பக்கலைக்கழக கட்டமைப்புக்குள்ளேயே மாணவர்கள் தொழில் பயிற்சிகளை பெறும் வகையில் இது தொடர்பிலான திட்டம் தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

தொழில் பயிற்சிக்கு தேவையான நிதி வசதிகளை பெற்றுக் கொடுக்கும் திட்டம் ஒன்றையும் செயற்படுத்தவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மரக்கறி சந்தையை விரைவில் புனரமைக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதியுதவியுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட புதுக்காடு சந்தியில் புதிய மரக்கறிச்சந்தைக்கட்டடம் ஒன்று கடந்த இரண்டு மாதத்திற்கு முன் நிர்மாணிக்கப்பட்ட போதும் இன்னமும் சந்தை திறந்து விடப்படாததால் மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் தமது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த முடியாமலும் நுகர்வோர் மரக்கறி வகைகளை பெற்றுக் கொள்ள முடியாமலும் அவதியுறுகின்றனர்.

அப்பகுதி மக்கள் தமது பொருட்களை சந்தைப்படுத்தவோ மரக்கறி வகைகளை பெற்றுக் கொள்ளவோ பரந்தன், பளை பகுதிகளுக்கு செல்ல வேண்டிய அவல நிலையும் உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் இச்சந்தைக் கட்டடத்தை திறந்து செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

# விசேட வைத்திய நிபுணர்களுக்கு ஆட்பற்றாக்குறை நிலவுகின்றது

## வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழுப்பு)

இலங்கையில் விசேட வைத்திய நிபுணர்களுக்கு ஆட்பற்றாக்குறை நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக் காட்டுகின்றது.

சில துறைகளுடன் தொடர்புடைய விசேட வைத்திய நிபுணர்கள் எவரும் நாட்டில் காணப்படவில்லை என சங்கத்தின் உப செயலாளர் டாக்டர் உபுல் குணசேகர குறிப்பிடுகின்றார்.

அதிகாரிகளுக்கு முறையான திட்டம் ஒன்று காணப்படாமையே இதற்கான காரணம் என அவர் கூறுகின்றார்.

உயர் கல்விக்கான வாய்ப்புகள் கிடைப்பதனால் வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதாக அவர் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு தெரிவிக்கையில், நாட்டின் விசேட வைத்திய நிபுணர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான முறையான திட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# அரசாங்கம் தனியார் சொத்துக்களை பொறுப்பேற்பதற்கு எதிர்பார்க்கவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பெறுபேறுகளை அடையத்தவறும் சொத்துக்களை மீண்டும் வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கான உத்தேச சட்ட மூலத்தின் ஊடாக எந்த வகையிலும் தனியார் துறையின் சொத்துக்களை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதனை உறுதிப்படுத்தியதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் அந்த நோக்கத்திற்கு மாறாக வேறு நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டிருப்பின் அத்தகைய சொத்துக்கள் மாத்திரமே பறிமுதல் செய்யப்படும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு உத்தேச சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வர்த்தகங்களைத் தவிர வேறு எந்தவொரு வர்க்கத்தின் மீதோ அல்லது சொத்தின் மீதோ உத்தேச சட்டமூலம் தாக்கத்தை செலுத்தாது எனவும் ஜனாதிபதி உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் வலிறுத்தியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் நடைமுறையிலுள்ள சட்டங்களும் அதற்கேற்ற வகையில் மாற்றமடைய வேண்டும் என தொழில் முயற்சியாளர்கள் கருத்து வெளியிட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச சட்ட மூலத்தில் எத்தகைய அரசியல் நோக்கமும் கிடையாது எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# வெதுப்பக உற்பத்திகளில் விலையேற்றமில்லை

(கொழும்பு)

எதிர்வரும் வரவு-செலவு திட்டத்திற்கு முன்னதாக வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் இவ்வாறு அறிவித்துள்ளது.

கடந்த வாரம் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து வெதுப்பகங்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் எம்.கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் வரவு- செலவுத்திட்டத்தில் வெதுப்பகங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் வெதுப்பக உற்பத்திகளை அதிகரிக்காமல் இருக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சொத்து விபரங்களை வெளியிடாதோர் குறித்து ஆராய்வதற்கு தீர்மானம்

## இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டி இதுவரை சொத்து விபரங்களை சமர்ப்பிக்கத் தவறியுள்ள மக்கள் பிரதிநிதிகள் தொடர்பில் ஆராய்வதற்கு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் தேர்தலில் வெற்றியீட்டிய ஒரு சில வேட்பாளர்கள் இதுவரை சொத்து விபரங்களை தேர்தல்கள் செயலகத்தில் சமர்ப்பிக்கவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சொத்து விபரங்களை சமர்ப்பிக்கத் தவறியுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு தண்டனை விதிக்க முடியும் என இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 420 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றியீட்டிய மற்றும் தோல்வியடைந்த அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்து விபரங்களை சமர்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துறைமுக வளாகத்தில் இடம்பெறும் தாமதத்தை தடுக்க வலியுறுத்து

கொழும்பு துறைமுக வளாகத்தில் நிலவும் தாமதத்தைத் தடுக்குமாறு வலியுறுத்தி கொள்கலன் வாகன ஊழியர்கள் ஆரம்பித்திருந்த பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினமிரவு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக, தற்போது இங்குறுகடை துறைமுகத்தின் நுழைவாயிலின் ஊடாக கொள்கலன்கள் துறைமுகத்திற்குள் பிரவேசிப்பது முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

தேவையற்ற தாமதம் காரணமாக தமது தொழிலை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் நிலவுவதாகவும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது விசேட கலந்துரையாடல் இடம்பெறுவதாக இலங்கை சுங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அஜந்த டயஸ் குறிப்பிட்டார். (அ-2)

ALUMNI ASSOCIATION
JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE

# ALUMNI AS
## JAFFNA ADVANCED TECHO
# பாராட்டி வாழ்

### HNDA - உயர் தேசிய கா




சி.அகிலா | அ.அமிர்தவர்ஷினி | யே.அனற்றொமானி | சி.அனித்தா | அ.ஜெயவதனன் | ஆ.பிரியங்கன் | பா.அஜந்தன் | பா.கஜானனசர்மா | இ.பிருந்தா | ச.பிருந்தாஜெனி | ச.நிரஞ்சன்



கு.ஜெயப்பிரிதா | ஜோ.நிசான்டன்சன் | யோ.எமிலியாகொன்சிலா | சி.யொயாழினி | கை.சதீஷ் | வ.கஜனி | க.கயூர்னா | அ.கலைச்செல்வி | கு.கலைமகள் | ஆ.கல்யாணி | க.மயூரதன்



இ.கீர்த்திகா | க.கேமமாலினி | க.கேசினி | லோ.கௌசி | கி.சிவசேகரன் | கு.கோகுலதாஸ் | ம.லிறஜா | சி.லக்ஷி | இ.லக்சிகா | ம.மதூஷன் | நா.மனோகரி



தி.நளாயினி | ந.கர்சன் | ந.தமிழினி | நே.மதியரசன் | சி.நேசமலர் | நே.நிலக்ஷன் | சி.நிரஞ்சனா | தி.நிரந்தா | க.நிருபா | பு.நிஷாந்திகா | சி.நித்தியா



ஜோ.ஜெயரஞ்சன் | இ.சிவமயூரன் | ஜெ.றாஜி | கி.ரஞ்சனி | இ.தயாகரன் | இ.ராஜ்கண்ணன் | இ.பிரசாந் | ஸ்ரீ.றேகா | ச.கோபிநாத் | ச.ஜனாங்கனன் | தி.சரளா



சி.சைலேஸ்வரன் | சோ.தயாபரன் | அ.சுபாஜினி | ஸ்ரீ.சுபாஜினி | சு.காமினி | சு.மனோதீபன் | தி.சுகந்தினி | க.சுகன்யா | ஜே.சுலோஜனா | சி.தனுஷியா | த.சுதாகர்



த.துர்க்கா | க.துஷ்யந்தினி | உ.கஜேந்திரன் | செ.வக்சலா | த.வனஜா | தி.வானதி | லோ.வாணி | வெ.அ.லிகிர்தம் | வே.காண்டீபன் | வே.லோகானந்தன் | க.வேணி

### HNDE - உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா



அ.சந்திரமலர் | யோ.யூஜின்ஜொவித்தா | ச.கீதாஞ்சலி | கு.டிலோமைனசீலன் | க.ஜெனனி | மு.ஜெகநந்தினி | ஜே.கொன்கிளேடியஸ் | சி.ஜெயதுர்க்கா | இ.ஜெயவாணி | த.கமலாதேவி | சு.கோமதி | த.லதாங்கி



ச.லாவண்யா | ம.மரியராசா | அ.மேரிஅனுஷியா | அ.மேரிஜீவிதா | செ.மதுரா | ச.நிருஜா | ப.பகீரதி | வ.ரோகினி | த.சிவகலா | கு.சோபனா | ஸ்ரீ.மயூரன் | த.சுபாகினி




பா.சுபாஜினி | ச.சுஜித்தா | மு.சுபத்திரா | த.தனாசனி | தி.தாரணி | வி.தர்சினி | வ.சசிகுமார் | கு.வேந்தினி | வி.யோகேஸ்வரன் | ம.வினோதா | ந.யசோதா

HNDA
HNDM
HNDIT
HNDE
HNDBS

# SOCIATION
## OLOGICAL INSTITUTE
# ந்துகின்றோம்

SLIATE

ாக்கியல் டிப்ளோமா



.தமிழன்பன் | வி.டட்ஷா | து.டசிதா | கு.தர்ஷிகா | ஜெ.கௌதமி | கு.தர்சன் | ஆ.ஜீவறஜனி | த.ஜெயமாலினி | ஜெ.சபேசன் | சோ.ஜெயந்தினி | ஆ.ஜெயந்தி



ஶ்ரீதவயோகராஜா | க.மதனாகரன் | ர.கனித்தா | ச.காஞ்சனா | க.வசந்தகோகுலன் | த.கபிதா | கா.கஜன் | கு.கஸ்தூரி | க.சரவணபவன் | க.யதீசன் | சா.கவிதா



செ.மரினாபவானி | ம.மோகனரூபன் | க.மேகலா | சீ.மேனகா | மு.மயூரதன் | மு.சயந்தன் | ச.மைதிலி | ந.ஜெயரூபன் | ந.கமல்ராஜ் | ந.தவரூபன் | ந.கணேசதாஸ்



ப.லக்ஷிதா | ப.நிரஞ்சன் | ப.சபீஸ்குமார் | ஞா.பந்றீசியா | சோ.பவித்திரா | அ.பிரசாந்தி | ச.பிரசாந்தி | க.பிரதீபா | செ.பிறேமினி | பெ.பிரியதர்சினி | ரா.தினேஸ்குமார்



த்.சாருண்யா | செ.நிர்மலன் | செ.பாலேந்திரன் | செ.செயிந்தன் | க.சர்மினி | கு.சர்மினி | பா.சியாமளா | சி.சிந்துயா | சி.திலீபன் | வி.சிவபுரந்தரசி | ச.சிவரஜனி




த.கௌசிகன் | தே.றெஜீவன் | த.சுகந்தன் | ப.தயாழினி | ந.தயாநிதி | த.ரதீசன் | தீ.ராஜீவ் | தி.பிரபாகரன் | சி.திருலோகநாயகி | ந.துஜாந்தி | து.றொபின்




வி.விஜயரமணி | அ.வினர்ஜிதா | வி.லிங்கரூபன் | கி.வினோதினி | க.விரூபி | பா.சசி | நா.அகிலன் | இ.ராஜ்கலிஸ்ரஸ்

**HNDIT - உயர் தேசிய தகவல்தொழில் நுட்ப டிப் ளோமா**



கோ.குகன் | ப.குலதர்ஷன்

இன்று (07.11.2011) திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 8 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் HNDA,HNDM,HNDIT, HNDE,HNDBS பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழையமாணவர் சங்க அங்கத்துவ மாணவர்களையும் பட்டம்பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.



செ.பிரார்த்தனாதேவி | சி.வகீதரன் | சி.சிவதர்சினி | த.யுகன் | வி.ராஜரட்னம் | ஜோ-.பிரவீந்திரா | ச.பிருந்தா

**HNDM - உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா**



அ.றொஜாந்தி | லோ.கிஷாலினி | ஜெ.மனோஜினி | அ.மேனசுகிதா | நா.திவாகர் | தி.நிருபா

**HNDBS - உயர் தேசிய வியாபார கற்கை டிப்ளோமா**



க.லோகநாதன் | சூ.பவித்ரா | வே.ராதா | தெ.ரூபிகா | நா.சபீதா



தி.நசிதா | இ.ராதிகா


## ALUMNI ASSOCIATION

**JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE**
**NO.665/2, BEACH ROAD,**
**JAFFNA.**

Tele:- 021 3206542 E-mail:- jatialumni@gmail.com
Web sit:- www.jatialumni.org.

# உயர்கல்வி நிலையங்களை கண்காணிக்க நடவடிக்கை

## அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தொழிற்படும் உயர்கல்வி நிலையங்கள் கண்காணிக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி மூலம் பணம் சம்பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள உயர்கல்வி நிலையங்கள் அவதானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்க தவறிய மாணவர்களுக்கு உயர்கல்வியை வழங்கும் ஒரே நோக்கையே அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பேராதனை, மொறட்டுவ, கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம், களனி மற்றும் றுகுணு ஆகிய பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கு ஏற்ற வகையில் மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் குறித்து இந்த மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு-செலவுத் திட்டத்தின் போது பிரஸ்தாபிக்கப்படும் என நம்பப்படுகின்றது. (அ-2)

# தே.க.கல்லூரிக்கான நேர்முகப்பரீட்சைகள் இம்மாத நடுப்பகுதியில் நடைபெறும்

தேசிய கல்வியியற் கல்லூரிகளின் அனுமதிக்கான நேர்முகப்பரீட்சைகள் இம்மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியினால் நடத்தப்படவுள்ள இந்துசமயம், கிறிஸ்தவம், விவசாயம், மனைப்பொருளியல், ஆரம்பக்கல்வி ஆகிய பாடநெறிகளுக்காக 2012 ஆம் ஆண்டுக்குரிய புதிய அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கே.பேர்னாட் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்கு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, பதுளை, களுத்துறை, மாத்தளை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் மட்டக்களப்பு, அம்பாறை பொலனறுவை ஆகிய மாவட்டங்களுக்குரிய நேர்முகப் பரீட்சைகள் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக பீடாதிபதி ஏ.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (அ-2)

# எரிபொருள் விலை பிரச்சினை குறித்து பேருந்து உரிமையாளர் சங்கம் கடிதம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டமை காரணமாக பேருந்து உரிமையாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தும் கடிதம் ஒன்று போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தத்தகவலை இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதம் பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு அமைய அனுப்ப தீர்மானித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கடிதத்தை இன்றைய தினம் கையளிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே எரிபொருட்கள் விலையேற்றம் காரணமாக நாளாந்தம் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா வரை சங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டின் அபிவிருத்தி குறித்து ரணிலுக்கு எதுவும் தெரியாது

## பாதுகாப்பு செயலாளர் காட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனை தேவையில்லை என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் எவ்வாறு இராணுவ நடவடிக்கைளை மேற்கொள்வது என்பது தொடர்பில் ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்க வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச விவகாரம் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து ரணில் விக்ரமசிங்க வெளியிடும் கருத்துக்களை பொருட்படுத்த தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ரணில் ஏற்படுத்திக் கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை பாரிய நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்து யுத்தத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென அண்மையில் ரணில் விக்ரமசிங்க கோரியிருந்தார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி முயற்சிகள் குறித்து ரணில் விக்ரமசிங்கவிற்கு எதுவித விளக்கமும் கிடையாது என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களைக்கப்பல்களின் மூலம் புலிகள் இறக்கிய போது ரணில் விக்ரமசிங்க என்ன செய்தார் என கேள்வி எழுப்பியுள்ளார். விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு வலையமைப்புடன் அரசாங்கம் தொடர்ச்சியாக போராடி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சீன நிறுவனத்திற்கு ஒதுக்கிய காணியில் வேறு ஹோட்டல்

## அரசாங்கம் தீர்மானம்

சீனாவின் தேசிய விமான தொழில்நுட்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிறுவனத்துக்கென ஒதுக்கிய 7 ஏக்கர் காலிமுகத்திடல் காணியை ஷீரற்றன் என்ற ஹோட்டல் நிர்வாகத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சீன நிறுவனத்திடம் இருந்து பெற்ற இந்தக் காணியை குறித்த ஹோட்டல் நிர்வாகத்துக்கு கையளிக்கும் வகையில் உடன்டிக்கை ஒன்று விரைவில் செய்துக் கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே சீன நிறுவனத்துக்கு குறித்த காணியை விற்பனை செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டு பின்னர் அதனை 99 வருட குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இதனை குறித்த சீன நிறுவனம் ஆட்சேபித்தது. இதனையடுத்து அந்த நிறுவனத்திடம் இருந்து காணியை பெற்று ஹோட்டல் நிர்வாகத்துக்கு அதனை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காலிமுகத்திடல் காணியை இழந்த சீன நிறுவனமும் தற்போது கொழும்பில் வேறு காணித்தொகுதியை தேடிக்கொண்டிருக்கிறது.

ஏற்கனவே காலிமுகத்திடலின் முன்னால் உள்ள பகுதியில் ஹோட்டல் நிர்மாணத்துக்கு 10 ஏக்கர் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# போதைப்பொருள் தட்டுப்பாடு சிறைக்கைதிகளையும் பாதித்தது

## சிலுமின பத்திரிகை தகவல்

(கொழும்பு)

சிறைச்சாலைகளிலுள்ள போதைப் பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சிலுமின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டில் நிலவி வரும் போதைப்பொருள் தட்டுப்பாடு சிறைக்கைதிகளையும் வெகுவாக பாதித்துள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையான சில கைதிகள் 200 ரூபா தொடக்கம் 3 ஆயிரம் ரூபா வரையில் செலுத்தி சிறியளவு போதைப்பொருளைப் பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

எனினும் நகர்ப்புறங்களில் போதைப்பொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு சிறைச்சாலைகளுக்கான போதைப்பொருள் விநியோகத்தை பாதித்துள்ளது.

இதனால் போதைப்பொருளுக்கு அடிமையான சிறைக் கைதிகள் பாதிக்க ப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# வீதி அகலப்படுத்தும் பணியால் சிங்கராஜவனத்திற்கு பாதிப்பில்லை

வீதி அகலப்படுத்தும் பணிகள் காரணமாக சிங்கராஜவனத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதென அது தொடர்பான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலன்னாவை மற்றும் கலவான பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு இடையில் போக்குவரத்தை இலகுபடுத்த இந்த வீதியை புனரமைக்க திட்டமிடப்பட்டிருந்ததாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க குறிப்பிட்டார்.

சிங்கராஜவனத்தின் எல்லைப் பகுதியிலுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான நிலப்பரப்பின் ஊடாக இந்த வீதியை புனரமைக்க திட்டமிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதற்கமைய குறித்த நிலப்பரப்பு சிங்கராஜவனத்தின் எல்லையை வலுப்படுத்துவதற்காக வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதுடன் அதற்கான எல்லையை அடையாளப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் குறித்த வீதியை புனரமைக்கவிருப்பதற்கு சுற்றாடல் துறை அமைச்சு தற்போது தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (அ-2)

# சரத் பொன்சேகாவிற்கு எதிரான ஹைகோப் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான ஹைகோப் வழக்கு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகா மற்றும் அவரது மருமகன் தனுன திலகரட்னவுக்கு எதிரான இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது. சரத் பொன்சேகா வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகளினால் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இந்த நிலையில் வழக்கை விசாரித்த நீதிமன்றம் அதனை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

சரத் பொன்சேகா இராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் இராணுவத்தினருக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் மோசடி இடம்பெற்றதாகவும் இதற்கு சரத் பொன்சேகா அனுசரணை வழங்கியிருந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# எதிர்க்கட்சிகள் சர்வதேசத்திற்கும் மக்களுக்கும் பொய்யான தகவல்களை வழங்குகின்றன

## அமைச்சர் பசில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பொய்யான தகவல்களை வழங்கி வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நட்டமடையும் நிறுவனங்களை தேசிய மயப்படுத்தல் குறித்து எதிர்க்கட்சிகள் மக்கள் மத்தியில் பிழையான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து உலக வங்கி பிரதிநிதிகளுக்கு அண்மையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

ஆடைக் கைத்தொழிற்சாலைகளுக்கு பாரியளவில் அரசாங்கம் சலுகைகளை வழங்கிய போதிலும் அவை உரிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வர்த்தக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவே புதிய சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தம்மை இடமாற்றுமாறு துமிந்தவின் மெய்ப் பாதுகாவலர்கள் கோரிக்கை

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் இரண்டு மெய்ப் பாதுகாவலர்கள் தமக்கு இடமாற்றம் தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிரிஹான பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரும் கடந்த வாரம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கொலையுண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் ஆதரவாளர்களால் தமக்கு ஆபத்து இருப்பதாக குறித்த இரண்டு பொலிஸ்காரர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் அவர்கள் இருவரினதும் கோரிக்கை இலங்கையின் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

துமிந்த சில்வாவுக்கு பிரபு பாதுகாப்பு பிரிவின் மூன்று வீரர்கள் பாதுகாப்பை வழங்கி வந்தனர். அதில் ஒருவர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மூன்றாண்டு திட்டத்தில் மூன்று இலட்சம் வீடுகள்

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

மூன்று ஆண்டுத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் மூன்று இலட்சம் வீடுகளை நிர்மாணிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இந்தத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக நிர்மாணத் துறை பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய குடிசை வீடுகளுக்கு பதிலாக மாவட்ட மட்டத்தில் வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் வீடமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதனைத் தவிர அரச ஊழியர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்திற்காக ஏற்கனவே ஆயிரத்து 500 மில்லியன்ரூபாஒதுக்கப்பட்டுள்ளதுடன்அடுத்தமூன்றுவருடங்களுக்கானநிதியை பெற்றுக் கொடுக்கவும் திறைசேரி இணக்கம்தெரிவித்துள்ளதாகஅமைச்சின் செயலாளர் கூறினார். (அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை வங்கி, கோப்பாயில் கடமையாற்றும்

**திரு. வேலும்மயிலும் காண்டீபன்**



இன்று 07.11.2011 பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெறுவதையிட்டு அவரை மனதார வாழ்த்துவதுடன், மென்மேலும் பல பட்டங்கள் பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்.
இலங்கை வங்கி,
கோப்பாய்.

(6746)


# 2011.11 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1492-உலகின் மிகப் பழைமையான விண்கல் மோதல் பிரான்சில் இடம் பெற்றது.

★ 1502-கொலம்பஸ் ஹொண்டுராஸ் கரையை அடைந்தார்.

★ 1665-உலகின் பழைமையானதும் இப்போதும் வெளிவரும் தலண்டன் கசெட் முதலாவது இதழ் வெளியானது.

★ 1893-கொலராடோ மாநிலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★ 1910-உலகின் முதலாவது விமானத் தபால் பொதிச் சேவை ரைட் சகோதரர்களால் ஒகையோவில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1917-ஒக்டோபர் புரட்சி விளாடிமிர் லெனின் தலைமையில் கம்யூனிசப் புரட்சியாளர்கள் ரஷ்யாவின் இடைக்கால அரசாங்கத்தைக் கவிழ்த்தனர். (பழைய ஜூலியன் நாட்காட்டியில் இது ஒக்டோபர் 25 இல் இடம்பெற்றது)

★ 1917-முதலாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் ஓட்டோமான் பேரரசிடம் இருந்து காசாப் பகுதியைக் கைப்பற்றின.

★ 1918-மேற்கு சமோவாவில் பரவிய ஒருவித நச்சு (வைரஸ்) நோய் காரணமாக 7 ஆயிரத்து 542 பேர் (20% மக்கள் தொகை) ஆண்டு முடிவிற்குள் உயிரிழந்தனர்.

★ 1931-மா சே துங், சீன சோவியத் குடியரசை ஒக்டோபர் புரட்சியின் நினைவு நாளென அறிவித்தார்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஆர்மேனியா என்ற சோவியத் மருத்துவக் கப்பல் ஜேர்மனிய விமானங்களின் குண்டு வீச்சில் மூழ்கியது. 5 ஆயிரம் பேர் வரையில் இதில் உயிரிழந்தனர்.

★ 1941-நாசி ஜேர்மனியர், உக்ரேனில் நெமிடீவ் என்ற இடத்தில் 2 ஆயிரத்து 580 யூதர்களைக் கொன்றனர்.

★ 1956-சூயஸ் கால்வாய் பிரச்சினை: எகிப்தில் இருந்து உடனடியாக ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இஸ்ரேல் படைகளை வெளியேறுமாறு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கேட்கப்பட்டது.

★ 1983-ஐக்கிய அமெரிக்காவின் செனட் கட்டடத்தில் குண்டு வெடித்தது.

★ 1991- மஜீக் ஜான்சன் தாம் எச்.ஐ.வி. நுண்மத்தை பெற்றுள்ளதாக அறிவித்து என்.பி.ஏ. இல் இருந்து வெளியேறினார்.

★ 1996-நைஜீரிய விமானம் ஒன்று லாகோஸ் அருகே வீழ்ந்ததில் 143 பேர் உயிரிழந்தனர்.

★ 2002-அமெரிக்கப் பொருட்களின் விளம்பரங்களை அறிவிக்க ஈரான் தடை செய்தது.

### பிறப்புக்கள்

★ 1867-மேரி க்யூரி, போலந்து மற்றும் பிரெஞ்சு வேதியியல் அறிஞர், 2 முறை நோபல் பரிசு பெற்றவர் (இ.1934)

★ 1879-லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர் (இ.1940)

★ 1888-சி.வி.ராமன், இந்திய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (இ.1970)

★ 1913-அல்பேர்ட் காம்யு, நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1960)

★ 1954-கமல்ஹாசன், தமிழ் நடிகர்

★ 1969-நந்திதாதாஸ், இந்திய நடிகை

★ 1980-கார்த்திக், தமிழ்ப் பின்னணிப் பாடகர்

### இறப்புக்கள்

★ 1862-பகதுர்ஷா ஜஃபர், பேரரசர், விடுதலைப் போராட்ட வீரர்

★ 1947-கோ. நடேசையர், இலங்கையின் மலையகப் பத்திரிகையாளர்

★ 1951-என்.சி.வசந்தகோகிலம், கர்நாடக இசைக்கலைஞர்

★ 2000-சி.சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி (பி.1910)



★ 1993-ஆன்மீகவாதி திரு முருக கிருபானந்த வாரியாரின் நினைவு தினம். (பி.1906)

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்

நன்கு தமிழ்பேசத் தெரிந்தவர் என்கிற காரணத்துக்காகவே நளினி சம்பவ இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக விசாரணை அதிகாரிகள் சொல்கிறார்கள். சம்பவ இடத்தில் நளினி எப்படி நடந்து கொண்டார் என்பதைப்பார்த்தாலே, இது அவரைச் சிக்க வைப்பதற்காகவே புனையப்பட்ட கதை என்பது புலனாகும்.

அரசுத் தரப்பு அவணத்தில் 77 ஆவது பக்கத்தில், "சிவராசன் தமிழ் நாட்டுக்காரர் போல் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர் என எழுதப்பட்டு உள்ளது. அவரே நன்கு தமிழ் பேசும் போது, மொழிப் பிரச்சினைக்காக ஏன் நளினியை அங்கே அழைத்துச் செல்ல வேண்டும்? அரசுத் தரப்பு சான்றுகளின்படி குற்றமுறு சதியின் உறுப்பினர் ஹரிபாபுவும் (பத்திரிகைப் புகைப்



## மகளே, என்னை மன்னித்துவிடு!

படக்காரரர்) அங்கு கூடவே இருந்துள்ளார். அவருக்கும் நன்றாக தமிழ் பேசத் தெரியும். "காங்கிரஸ் பிரதேசப் பொறுப்பாளர் லதா கண்ணன் மற்றும் அவர் மகள் கோகிலா ஆகியோர் சம்பவ இடத்தில் நட்பாக இருந்தனர். (இதற்கு அரிபாபு எடுத்த புகைப்படமும் ஆதாரமாக உள்ளது) ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க நின்ற கூட்டத்துக்குள் சிவராசன், தனுவை நிறுத்த அவர்கள் முயற்சி செய்தார்கள். அதே நேரம் நளினியும் சுபாவும் கூட்ட இடத்துக்குப் போனபின் அங்கு இருந்த பெண்கள் பகுதியில் போய் அமர்ந்து கொண்டனர். ராஜீவ்காந்தி வந்து இறங்கியவுடன் நளினியை சுபா அவசரகதியில் பிடித்து இழுத்துக் கொண்டு அந்த இடத்தைவிட்டு வெகு தூரம் வந்து விட்டார். அப்போதுதான். குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது!" என்று அரசுத்தரப்பு ஆவணங்களிலேயே எழுதப்பட்டுள்ளது. சிவராசனுக்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் உதவக்கூடிய நிலையில் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? ராஜீவ்காந்தியை தனு நெருங்க சிவராசனே முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார். தனு மாலை அணிவிக்க அனுமதி வாங்கியதும், ராஜீவ் காந்தி அருகில் அவர் நெருங்க மறைப்புக் கொடுத்ததும் சிவராசன்தான். ராஜீவ்காந்தி வந்து இறங்கிய உடனேயே நளினி அந்த இடத்தில் இருந்து சுபாவினால் வேமாகக் கூட்டி வரப்பட்டார். இத்தனை விடயத்தையும் அடித்துக் சொல்லும் அரச தரப்பு எந்த விதத்தில் ராஜீவ் கொலையில் நளினிக்கு பங்களிப்பு இருப்பதாக சொல்கிறது? நளினிக்கே கொலைச்சதி தெரிந்திருக்கவில்லை என்கிற போது, எனக்கு எப்படி இது பற்றி தெரிந்திருக்கும்? நான் எந்த விதத்தில் அவரைக் கட்டாயப்படுத்தி இருக்க முடியும்?

07.5.91 அன்று சிவராசன், சுபா, தனு ஆகியோருடன் நானும் நளினியும் சென்னையில் நடந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பொதுக்கூட்டத்துக்குப் போனோம் என்றும், அங்கே கொலைச் சதிக்கான ஒத்திகை பார்க்கப்பட்டதாகவும் சித்திரிக்கிறது அதிகாரிகள் தரப்பு. அந்த கூட்டத்துக்குப் போனோம் என்பதற்கு எங்களுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும்தான் அதிகாரிகள் ஆதாரமாகவைக்கிறார்கள். ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய அந்தக் கூட்டத்தில் ஒத்திகை நடந்ததாகச் சொல்வது கொஞ்சமாவது பொருந்தக் கூடியதா? சரி, சிவராசன் அதனை ஒத்திகைத் தளமாகவே பாவித்து இருந்தாலும், அதை உறுதியாகச் சொல்ல அரசத்தரப்பில் என்ன சாட்சி இருக்கிறது? ஆனால், என்னையும் நளினியையும் திட்டமிட்டு ஏமாற்றவே வி.பி சிங் கூட்டத்துக்கு சிவராசன் அழைத்துக் கொண்டு போனார் என்பதற்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன. கொடூரப் படுகொலையை நிகழ்த்த, தான் வரவில்லை என்பதையும், அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுதான் தனது எண்ணம் என்பதையும் சிவராசன் எங்களிடம் ஏற்படுத்த முயன்று இருக்கிறார். அதில் வெற்றியும் பெற்றார். "வி.பி.சிங் கூட்டத்துக்கு போனது மாதிரித்தான் ராஜீவ் காந்தி கூட்டத்திற்கும் போக இருக்கிறோம்." என்பதையும் சிவராசன் நம்ப வைத்தார்.

சிவராசன் மேலிடத்துக்கு அனுப்பிய வயர்லெஸ் செய்தியைச் சுட்டிக்காட்டும் அரசதரப்பு, "எதிர்காலத்தில் இயக்கத்துக்கான ஆதரவை வளர்க்க மாலை அணிவித்து புகைப்படம் எடுக்கிறோம் என்றுதான் சொல்லி இருக்கிறோம். எம்மூவரைத் தவிர (சிவராசன்,தனு,சுபா) வேறு யாருக்கும் விடயம் தெரியாது" என 7.5.91 அன்று வி.பி.சிங் பொதுக் கூட்டத்துக்குப் போய்வந்த பிறகு தகவல் அனுப்பியதாக சொல்லப்பட்டிருக்கிறது. கொலைச்சதி குறித்தோ, அதற்கான ஏற்பாடுகள் குறித்தோ சிவராசன் எங்களிடம் ஏதும் சொல்லவில்லை என்பதற்கு இந்த வார்த்தைகள் போதாதா?


போலிப் புகைப்படக்காரரர் அடையாள அட்டை, அரிபாபுவினால் எனக்கு தயார் செய்து தரப்பட்டதாக அரசுத் தரப்பு சொல்கிறது. எதற்காக அந்த அடையாள அட்டை எனக்கு? அதை எங்கு, எப்போது, யார் தயார் செய்து கொடுத்தது? அதில் உள்ள எனது புகைப்படம் எங்கு எடுக்கப்பட்டது? யாரால் எடுக்கப்பட்டது? அதில் உள்ள கையொப்பம் யாருடையது? எனது கைரேகை ஏதும் இருந்ததா? இப்படி எத்தனை எத்தனை கேள்விகள்... இது குறித்து விசாரனைகளை அதிகாரிகள் ஏன் மேற்கொள்ளவில்லை? சரி, அதெல்லாம் இருக்கட்டும். ராஜீவ்காந்தி கொலை விவகாரத்தில் அந்த அடையாள அட்டையை எந்த விதத்தில் நான் பயன்படுத்தினேன்? இந்தியாவின் மிக உயரிய தலைவர் கொலையான விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஒருவரின் போலியான அடையாள அட்டை கிடைத்தால், அது சம்பந்தமான அனைத்து ரிஷி மூலங்களையும் அதிகாரிகள் தோண்டித்துருவி இருக்க மாட்டார்களா? எங்களைக் குற்றவாளியாக்க வேண்டும் என்கிற ஒரே காரணத்துக்காக, விசாரணை அதிகாரிகள் விரித்த வலைகளில் ஒன்றுதான் அந்த அடையாள அட்டையும். இதை எல்லாம் சொல்வதால், என் மீதான தவறுகளை நான் சரிக்கட்ட நினைப்பதாகவோ, சிவராசன் மீது பழிபோட்டுத் தப்பித்துக் கொள்வதாகவோ, தயவு செய்து யாரும் நினைக்க வேண்டாம். இனி தப்பித்து நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? காலையில் அலுவலகத்துக்கு வந்து மாலை 6 மணிக்கு இல்லம் திரும்பத் தாமதமானால் உங்கள் மனம் எப்படி எல்லாம் தவித்து விடுகிறது..."அப்பா கிளம்பிட்டேன்டா செல்லம்... 10 நிமிடத்தில் வந்து விடுவேன்" எனக் குழந்தையை சமாதானப்படுத்துவதும், "கோவிக்காதேம்மா, இந்தா வந்திட்டேன்"என மனைவியிடம் உருகுவதும் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் நடத்தும் பாசாப் பகிர்வுதானே? 21 வருடங்களாக என் குடும்பத்தை பிரிந்துகிடக்கிற நான் எத்தகைய வார்த்தைகளால் அவர்களைச் சமாதானப்படுத்த முடியும்? "அப்பா..." எனத் தெளிவான உச்சரிப்பில் அழைக்கும் குரலைக் கேட்பதற்கு முன்னரே மகளை பிரிந்து தவித்தோமே... இரண்டு வயதில் எங்களிடம் இருந்து ஆரித்ரா பிரித்து அழைத்துச் செல்லப்பட்ட நிகழ்வை ஒரு தகப்பனாக தயைகூர்ந்து நினைத்துப் பாருங்கள். உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் அவள் இருக்கிறாள் என்பதைத் தவிர்த்து எங்களுக்கு என்ன ஆறுதல்? ஒருவன் கொலை செய்திருந்தாலும் அதற்கான தண்டனையை நாங்கள் அனுபவித்து விட்டோம். இளமை தொலைத்து - இல்லம் இழந்து- உலகம் பாராது- உணர்வுகள் முழுங்கிய உயிராக வாழும் வாழ்வெல்லாம் ஒரு வாழ்வா? அடைபட்டு வாழ்தல்தான் அதிகபட்சத் துயரம். உலகத்தின் மிகச்சிறிய கூண்டுக்குள் முடங்கி எதையுமே பாராது வாழும் வாழ்க்கை எவருக்குமே அமையக் கூடாது. "நல்லவர்கள்" எனச் சொல்லி இனித் தப்பித்தால் மட்டும் நாங்கள் இழந்த எல்லாமும் எங்களுக்கு கிடைத்து விடப் போகிறதா? விசாரணை அதிகாரிகளிடம் எவ்வளவோ விளக்கிச் சொல்லியும், கடிதமாக, மனுவாகக் கதறித் தீர்த்தும் நீங்காத எங்களின் சோதனை இப்போது விளக்கமாக எழுதுவதால் நீங்கப் போகிறதா? தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக எங்களின் நியாயங்களை நாங்கள் எழுதவில்லை. மரணமே நிகழ்ந் தாலும் என்றைக்காவது எங்களின் விளக்கம் ஏற்கப்படும் என்கிற நிறைவுக்காகவே இதைச் சொல்கிறேன்.

நாங்கள் அணுவணுவாக மரணத்தை அனபவித்தாயிற்று... "இன்று, நாளை என ஏங்கியேங்கியே எல்லாத்துயரங்களையும் கடந்தாயிற்று... வெளியே வந்தாலும் "உயிர் மட்டும் மிச்சம்" என்கிற எண்ணத்தைத் தவிர எங்களிடத்தில் வேறு என்ன உணர்வு ஏற்பட்டு விடப் போகிறது. ஆனாலும், இந்த உலகத்தின் வெளிப்பரப்பில் நீந்த முடியாதா என்கிற ஏக்கம் அடிமனதில் எப்போதும் கிடக்கிறது. அதற்குக் காரணம் எங்களின் அன்பு மகள் ஆரித்ரா.

10

"அப்பா உங்களை எப்போ நான் பார்ப்பேன்? உங்களின் தூக்கிற்கு நாள் குறிக்கப்பட்டது தெரிந்து நான் எப்படியெல்லாம் அழுதேன் என்பது தெரியுமா அப்பா? பாட்டிம்மா, சித்தப்பா, சித்தி, அத்தை... யாருமே இங்கு சாப்பிடவில்லை; தூங்கவில்லை, நமக்கு ஏன் அப்பா இப்படி ஒரு வாழ்க்கை? இரவு முழுக்கத் தூக்கம் இல்லாததால், உங்களின் கடிதங்களையும் ஓவியங்களையும் மட்டுமே தடவிப் பார்க்கிறேன். கற்பனைக் கதைகளிற்கூட இப்படி ஒரு துயரமான வாழ்க்கை இருக்குமா என்பது தெரியவில்லை அப்பா. அம்மா ஓரிடத்தில்... அப்பா ஓர் இடத்தில்... மகள் ஓரிடத்தில்...என எதற்காக இந்த வாழ்க்கையை வாழ்கிறோம். நீங்கள் ஒரு தந்தையாக எனக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் உறவுகளே எனக்குச் செய்கிறார்கள் ஆனால், அப்பா என கட்டிப் பிடித்து உங்கள் மடியில் புரளும் நாளுக்காக ஏங்கும் என் பாசத்தை குடும்பத்தினரால், கொடுக்க முடியுமா? உலகத்திலேயே இப்படியொரு பாவப்பட்ட ஜென்மம் என்று என்னைத்தவிர வேறுயாருமே இருக்க மாட்டார்கள் அப்பா. உங்களைப் பார்க்காத ஒவ்வொரு நாளுமே எனக்கு நரகம் தான். சாப்பாடு, படிப்பு, தூக்கம் என எதையுமே செய்ய முடியாமற் தவிக்கும் என் நிலைமை என[illegible]க்குத்தான் சரியாகுமோ?"

இப்படி ஒரு கடிதம் எழுதியிருக்கிறாள் ஆரித்ரா. வரிக்குவரி அப்பா என்கிற வார்த்தையை அவள் சேர்த்து எழுதியிருக்கும் பக்குவத்தில் அவளுடைய அபரிமிதமான பாசத்தை உணர்கிறேன். மகளின் கையெழுத்தை மடியில் வைத்துத் தடவிப் பார்க்கிறேன். அதில் உள்ள ஒவ்வொரு எழுத்திலும் வழிகிற துயரத்திற்கு பதில் சொல்ல முடியாமல் பரிதவிக்கிறேன். அப்பா... என அழைக்கிற மறு கணத்திலேயே அவள் முன்னால் போய் நிக்க முடியாதா, எனத் தடுமாறித் தவிக்கிறது மனது. மகளே... நீ இருக்கும் திசை நோக்கி மண்டியிட்டு அழுகிறேன். உன் ஒவ்வொரு நாள் வளர்ச்சியிலும் உச்சி முகர்ந்து சிலிர்த்திருக்க வேண்டியவன் உன்னைக் காணாது கம்பிகளுக்குள் கதறிக் கிடக்கறேன். "என் அப்பாவைக் காப்பாத்துங்க" என மீடியாக்களிடம் நீ கதறியதாகக் கேள்விப்பட்டேன். அம்மாவின் வயிற்றில் இருமாதக் கருவாக இருந்தபோது குண்டு வெடிப்புச் சத்சத்தத்தில் உனக்கு என்ன ஆனதோ எனப் பயந்தேன். அம்மாவின் கருப்பைச் சுவரை கெட்டியாகப் பிடித்தபடி உம்மைக் காத்துக்கொண்ட எம்மகளே...இருமாதக் கருவிலேயே கற்றுக் கொண்ட அந்தப் பக்குவம்தான் இப்போதும் உன்னைக் காப்பாற்றுகிறதோ என்னவோ... எங்கள் வயிற்றில் பிறந்த பாவத்தாலே இத்தனை சுமைகளுக்கு ஆளாகி தவிக்கிறாயே... உன்னை நோக்கி அழ மட்டுமே இந்த அப்பனால் முடிகிறது.



ஜூனியர் விகடன்

# இந்தியா- ரஷ்யா இடையிலான எளிமையான விசா நடைமுறை

(புதுடில்லி)

இந்தியா- ரஷ்யா இடையிலான எளிமைப் படுத்தப்பட்ட விசா நடைமுறை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

கடந்த 2010 டிசெம்பர் 21 இல் ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மெட்வதேவ் இந்தியா வந்திருந்தார்.

அப்போது இரு நாடுகளுக்கிடையிலான எளிமைப்படுத்தப்பட்ட விசாவுக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதன்படி இரு நாடுகளைச் சேர்ந்த அதிகாரபூர்வ பிரதிநிதிகள் குழு, தொழில் பிரமுகர்கள், தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைப்புக்களின் உறுப்பினர்கள் அறிவியல், பண்பாடு, படைப்புக்கலை இவற்றில் ஈடுபட்டுள்ளோர், பாடசாலைக் குழந்தைகள், பிற மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் போன்றோர் எளிமைப்படுத்தப்பட்ட விசாவை பெற முடியும்.

குறிப்பாக இதற்குமுன் விசா வழங்குவதற்கு 14 நாட்கள் அவகாசம் எடுக்கப்பட்டது. இனி 3 நாட்களில் விசா கிடைக்கும் எனவும் சுற்றுலா வந்தபோது ஆவணங்களை தொலைத்துவிட்டால் மிக விரைவில் உரியவர்கள் தங்கள் தாய்நாடு திரும்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.


இந்த ஒப்பந்தம் கடந்த ஜூன்மாதம் 12 ஆம் திகதி பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவை குழுவில் ஒப்புதல் பெற்றது. இதையடுத்து உடனடியாக நடைமுறைக்கு வந்தது.

இந்நிலையில் ரஷ்ய வெளியுறவு செய்தித் தொடர்பாளர் அலெக்சாண்டர் லுகாஷேவிச் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், இந்த ஒப்பந்தம் ரஷ்யாவில் டிசெம்பர் முதல் அமுலுக்கு வருகிறது எனத் தெரிவித்தார்.

(அ-2)

# விமான நிலையத்தில் என்னை புலிகளைபார்ப்பதுபோல பார்த்தனர்

## சீமான் தெரிவிப்பு



(புதுடில்லி)

நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் அமெரிக்காவில் நடைபெற்ற உலகத்தமிழர் பேரமைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்றிருந்தார். நியூயோர்க் விமான நிலையத்தில் அமெரிக்க அதிகாரிகள் அவரை தடுத்து நிறுத்தினர்.

நீங்கள் விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர். எனவே உங்களை அமெரிக்காவுக்குள் செல்ல அனுமதிக்க முடியாது என்று விமான நிலைய அதிகாரிகள் கூறியதால் சீமான் அதிர்ச்சி அடைந்தார்.அமெரிக்க பயணத்துக்காக இந்திய அரசாங்கத்திடம் இருந்து முறைப்படியான பயண அனுமதி சீட்டுக்கள் அனைத்தும் நான் வாங்கி உள்ளேன்.

பின்னர் ஏன் அனுமதி மறுக்கிறீர்கள் என்று சீமான் கேட்டுள்ளார். இதற்கு உரிய பதில் அளிக்காத அதிகாரிகள் அவரை அங்கிருந்து திருப்பி அனுப்புவதிலேயே குறியாய் இருந்துள்ளனர். அதன்படி சீமான் அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணிக்கு சீமான் அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பினார். விமான நிலையத்தில் அவரை ஏராளமான நாம் தமிழர் கட்சி தொண்டர்கள் வரவேற்றனர்.

சீமானை வரவேற்க திரண்ட நாம் தமிழர் தொண்டர்கள் மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

அப்போது சீமான் செய்தியாளர்களிடம், விசா உள்ளிட்ட உரிய பயண சீட்டுக்களுடன் அமெரிக்காவுக்கு சென்ற என்னை அங்குள்ள விமான நிலைய அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

அப்போது விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்பதாலேயே எனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் தூண்டுதலே காரணம்.

அமெரிக்க விமான நிலையத்தில் அதிகாரிகள் கேட்ட கேள்விகள் என்னை அதிர்ச்சி அடையச் செய்தது. விடுதலைப்புலி போலவே அவர்கள் என்னை நடத்தினர்.

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் இம்மானுவேல் அடிகளார் சென்னை விமான நிலையத்தில் இறங்குவதற்கு இங்குள்ள அதிகாரிகள் அனுமதி மறுத்தது போல அமெரிக்காவில் எனக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இது தமிழர் விரோத செயலாகும் என்று கூறினார்.

(அ-2)

# பிணை மனுக்கோரி உயர்நீதிமன்ற கதவுகளை தட்டுகிறார் கனிமொழி



(புதுடில்லி)

கனிமொழியை காப்பாற்றும் அடுத்தகட்ட நடவடிக்கையை காலதாமதம் செய்யாமல் மீண்டும் தி.மு.க தலைமை ஆரம்பித்துள்ளது. கனிமொழிக்கு ஜாமீன் அளிக்க சி.பி.ஐ நீதிமன்றம் மறுத்துவிட்டதால் டில்லி உயர் நீதிமன்றில் கதவுகளைத் தட்டும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதற்கான கனிமொழி தரப்பில் பிணை கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் மனதை தேற்றிக் கொண்டு கனிமொழியை பிணையில் கொண்டு வருவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கையில் தி.மு.க தலைமை இறங்கியுள்ளது. கடந்த 4 ஆம் திகதி உயர்நீதிமன்றில் கனிமொழி சார்பில் பிணை கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

(அ-2)

# கூடங்குளம் அணுமின் நிலையம் மின் உற்பத்தியை ஆரம்பிக்கும்

கூடங்குளம் அணு உலைக்கு எதிராக அணு எதிர்ப்பாளர் குழுக்களும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களும் போராட்டம் நடத்திய நிலையில் தற்போது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்த சில குழுக்களும் களமிறங்கியுள்ளதாக பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையம் அடுத்த மாதம் மின் உற்பத்தியை ஆரம்பிக்க தயாராகி விட்டது. ஆனால் ஒட்டுமொத்த முட்டுக்கட்டையாக வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைத்த கதையாக அணுமின் நிலையத்தை மூடக்கோரி ஒரு தரப்பினர் தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.

இதற்கிடையில் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ, பழ.நெடுமாறன் மற்றும் சீமான் ஆகியோரும் திடீரென அணு உலை எதிர்ப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதனால் அணு எதிர்ப்பு போராட்டத்தில் அரசியல் விளையாடுவது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. ஏற்கனவே இலங்கையில் துன்பப்படும் தமிழர்களுக்கு ஆதரவாக பல இயக்கங்கள் களமிறங்கி போராடின. இதில் விடுதலைப்புலிகள் இயக்க நடவடிக்கைகளுக்கு மட்டும் வைகோவும் அவரது ஆதரவு நண்பர்களும் பல ஆண்டுகளாக குரல் கொடுத்தனர்.

வெளிநாட்டு இலங்கைத்தமிழர் இயக்க கூட்டங்களில் இவர்கள் பலமுறை பங்கேற்றுள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் புலி ஆதரவு குழுக்கள் செயற்படுவதாக பலமுறை செய்திகள் வந்துள்ளன. வைகோவும் அவரது ஆதரவு குழுக்களும் மேற்கத்தேய நாடுகளின் இலங்கை தமிழர் நிகழ்ச்சிகளில் பலமுறை பங்கேற்றுள்ளனர்.

இதற்கிடையில் அணு எதிர்ப்பு குழுவில் புலி ஆதரவு குழுக்களும் கலந்து விட்டதாக கூறப்படுகிறது.

அணு எதிர்ப்பு போராட்ட பின்னணியில் வெளிநாட்டு மேற்கத்தேய நாட்டு சக்திகள் உள்ளதாக இந்திய அணுசக்தி கமிஷன் தலைவர் பானர்ஜி மும்பையில் பேட்டியளித்துள்ளார்.

இது மட்டுமன்றி சில கடல் வாணிப குழுக்களும் போராட்ட பின்னணியில் உதவி செய்வதாக தெரிகிறது.

கூடங்குளம் அணு உலை இருக்கும் பகுதி கடலை ஒட்டிய பாதுகாக்கப்பட்ட பகுதி என்பதால் 24 மணிநேரமும் இராணுவம் சுற்றிகொண்டிருக்கும். இனிமேல் இங்கு சட்டவிரோத கடத்தல்களுக்கு துளி கூட இடம் கிடைக்காது. இலங்கையை மையமாக வைத்து வாணிபம் செய்யும் குழுக்களும் அந்தமான் லட்சத்தீவுகள், மொரீஷியஸ் தீவுகளை மையமாக கொண்ட சட்டவிரோத குழுக்களும் கூடங்குளம் அணு உலையை சுற்றியுள்ள பாதுகாப்பால் பெரும் பாதிப்படைவர். இந்த போராட்டம் நாங்கள் எதிர்பாராத மக்கள் போராட்டமாக இருந்தாலும் பின்னணியில் பலவகை சக்திகள் பயன்பெறுகின்றன. மக்கள் பாதுகாப்பு மட்டும்தான் போராட்டத்தின் இலட்சியம். ஆனால் அதன் பின்னணியில் பல இலட்சியங்கள், பல கரங்கள், பல சக்திகள் பயனாளியாகின்றன.

எனவே அணு எதிர்ப்பு போராட்டம் தற்போது அதன் கரையை கடந்து அரசியல் ரீதியான சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது என்பது மட்டும் தெளிவாக தெரிகிறது.

(அ-2)

## பாரதச் செய்திகள்

# இந்தியாவுக்கு வர்த்தக நட்புநாடு அந்தஸ்து கிடையாது -கிலானி

இந்தியாவுக்கு வர்த்தக ரீதியிலான நட்பு நாடு அந்தஸ்து வழங்கப்பட்டதாக கூறப்பட்டதை பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி மறுத்துள்ளார்.

முன்னதாக இந்தியாவுக்கு வர்த்தக ரீதியிலான நட்பு நாடு அந்தஸ்து வழங்கும் முடிவை பாகிஸ்தான் அமைச்சரவை எடுத்துள்ளதாக பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் பிர்தோஸ் அவான் தெரிவித்திருந்தார்.

இது தற்பொழுது பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அரசின் இம்முடிவு தங்களுக்கு தீங்கிழைக்கும் என வலதுசாரி பிரிவினைவாதிகளும் வர்த்தகர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்தியாவுக்கு வர்த்தக ரீதியிலான நட்பு நாடு அந்தஸ்து வழங் கப்பட்டுள்ளதாக வந்த செய்தியை பாகிஸ்தான் பிரதமர் மறுத்துள்ளார்.

இந்தியாவுக்கு அத்தகைய அந்தஸ்து வழங்குவதற்கான கொள்கை ரீதியான முடிவு எடுக்க மட்டுமே அனுமதி வழங்கப்பட்டதாகவும் இந்தியா -பாகிஸ்தான் இடையே நடக்கும் பேச்சுவார்த்தையின் போது இது குறித்து விவாதிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு இந்தியா கடந்த 1996 ஆம் ஆண்டு வர்த்தக ரீதியிலான நட்பு நாடு அந்தஸ்து வழங்கியது குறிப்பிடத்தக்கது.

(அ-2)




பெற்றோல் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து டில்லியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

## நட்டமடையும் தனியார் நிறுவனங்கள் பொறுப்பேற்பதில் மாற்றமில்லை

# அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நட்டமடையும் 36 தனியார் நிறுவனங்களை பொறுப்பேற்கும் தமது திட்டத்தில் மாற்றம் இல்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் வாரத்தில் இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரியவருகிறது. தம்மை நேற்று முன்தினம் சந்தித்த தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ள தனியார் நிறுவனங்களில் 12 ஆடை ஏற்றுமதி நிறுவனங்களும் 17 உற்பத்தி நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன்போது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு நிறுவனங்களான தயா கமகேயின் செவனகல சீனித்தொழிற்சாலை, ஹரி ஜெயவர்த்தனவின் பெலவத்த சீனி ஆலை மற்றும் தயா வெத்தசிங்கவின் லங்கா ட்ரக்டர்ஸ் நிறுவனம் என்பவற்றுக்கு விலக்களிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் குறித்த நிறுவனங்களை தவிர அரசாங்கம் கையேற்க்க உத்தேசித்துள்ள தனியார் நிறுவனங்களின் முகாமைகள் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு ஆதரவை வெளியிட்டுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# தென்மராட்சி கல்வி வலயத்தின் சதுரங்க போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய 9, 10, 11 ,12 வயதுப்பிரிவு மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டி முடிறுகள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தனால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு.

**9 வயதுப் பிரிவு (ஆண்)**

ஏ.பிரணவன் (மீசாலை மகா வித்தியாலயம்), இ.கோபிதாஸ் (சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), இருவர் மூன்றாமிடம் தி.கஜந்தன் (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை),ம.கவிந்தன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

**9 வயதுப் பிரிவு (பெண்)**

ப.வேணி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), இ.புகழினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), இ.தனுஷா (கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்)

**10 வயதுப் பிரிவு (ஆண்)**

அ.கஜராஜ் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை),பி.கோபிராம் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), மூவர் மூன்றாமிடம் எம்.அபிசேக் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), அ.பிரசாந் (கைதடி சேதுகாவலர் பாடசாலை), லாவண்யன் (கச்சாய் அ.த.க பாடசாலை)

**10 வயதுப் பிரிவு (பெண்)**

த.கஜிதா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), பா. லகந்துஷா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ), கே.கலினா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

**11 வயதுப் பிரிவு (ஆண்)**

த.அசோகன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), தா.இந்துஜன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்),சி.அஜந்தன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை).

**11 வயதுப் பிரிவு (பெண்)**

அ.லாவண்ஜா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), சி.சங்கவி (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை),க.தேனுஷா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்),

**12 வயதுப் பிரிவு (ஆண்)**

ஏ.கீர்த்தனன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),பி.நிரோஜன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), கு.அஜித் (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்),

**12 வயதுப் பிரிவு (பெண்)**

எஸ்.சங்கவி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வி.டெய்சி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), டி.யனுஷா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

(அ-3-29)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மாணவ ஆசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியற் கல்லூரிகளிற்கான 2012 ஆம் ஆண்டிற்கான மாணவ ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்முகத் தேர்வு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இதற்கமைவாக கணிதம் பாடம் (ஆங்கிலம் மொழி மூலம்) எதிர்வரும் 12 ,13 ஆம் திகதிகளிலும் நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், வர்த்தகம் ஆகிய பாடங்களிற்கு எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளிகளிலும் விஞ்ஞானம் பாடம் (ஆங்கில மொழி மூலம்) எதிர்வரம் 18 ஆம் திகதியிலும் ஆரம்பக் கல்வி, விவசாயம், மணையியல் ஆகிய பாடங்களிற்கு எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளிலும் தமிழ், விசேட கல்வி ஆகிய பாடங்களிற்கு எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளிலும் கணிதம், விஞ்ஞானம் (தமிழ்மொழி மூலம்) சித்திரம் ஆகிய பாடங்களிற்கு 4 ஆம் திகதியும் நடைபெற வுள்ளது.

கல்வியியற் கல்லூரிகளிற்கு விண்ணப்பித்தவர்களில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு மட்டுமே முதலாம் கட்ட நேர்முக தேர்வு இடம்பெற்றுள்ளது.

இதில் போதுமானவர்கள் சமுகமளிக்காத போது குறைந்த புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவார்கள் என பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

(அ-2)

# அஞ்சல் தொழிற்சங்கம் போராட்டத்தில் ஈடுபடும்

## ஊடகப் பேச்சாளர் கே.எம். சிந்தக பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

அஞ்சல் தொழிற்சங்க ஒன்றியம் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் கடும் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இந்த தகவலை ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் கே.எம். சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

அஞ்சல் திணைக்களத்தை அஞ்சல் மா அதிபரிடம் இருந்து காப்பாற்றும் நோக்கிலேயே இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனிடையே அஞ்சல்மா அதிபர் முன் வைக்கப்பட்டுள்ள பல குற்றச்சாட்டுகள் காரணமாக அமைச்சரவை அனுமதிக்கப்பட்டுள்ள பல விசாரணை செய்வதற்கு மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவில் அஞ்சல் சேவை அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் உள்ளடங்கின்றனர்.

இந்த நிலையில் அஞ்சல் மா அதிபர் மீது முன் வைக்கப்பட்டுள்ள 26 குற்றச்சாட்டுக்களில் 21 குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகியுள்ளன.

இதேவேளை இந்த குழுவின் அறிக்கை அஞ்சல் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இந்தியப் பாதுகாப்பு பிரிவினரால் இலங்கை மீனவர்கள் ஒப்படைப்பு

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப்பட்ட பின்னர் விடுதலையான 14 இலங்கை மீனவர்களை இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களுடைய ஆறு படகுகளையும் இதன்போது ஒப்படைக்கப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறைக்கு வடக்கேயுள்ள சர்வதேச கடல் எல்லையில் இந்தப் படகுகள் மீனவர்களும் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் இந்த மீனவர்களை இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் அண்மையில் கைது செய்திருந்தனர்.



(அ-2)

# பரிசளிப்பு விழா

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் 125 ஆவது ஆண்டு ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக கோப்பாய் வலயக் கல்விப்பணிப்பாளர் வி.பாலசுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்னாள் உப அதிபர் யு. சுரேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(அ-2)




சாவகச்சேரி நகரசபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி, மீசாலை நுணாவில் ஆகிய பொதுநூலகங்கள் இணைந்து நடத்தப்பட்ட [illegible]களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் ம.அம்பலவாணர் மங்கல வி[illegible]கேற்றுவதனையும் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண உள்ளூராட்சி அமைப்பின் உதவிச் செயலாளர் திருமதி. ந. இன்பராஜ் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

கெட்டவர்கள் தங்கள் தவறுகளுக்கு சமாதானம் தேடுவார்கள். நல்லவர்கள் தங்கள் தவறுகளை விட்டுப் பிரிவார்கள். -- பென் ஜான்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## காகத்தின் கூட்டில் முட்டையிடுவதுதான் குயிலின் தலை விதியா?

பிரித்தானிய மக்களின் மனநிலைக்கும் அமெரிக்க மக்களின் குணவியல்புக்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு. இவ்வாறு இனத்திற்கு இனம், சமயத்திற்கு சமயம், மொழிக்கு மொழி வேறுபட்ட குணவியல்புகளை உடைய மக்களைக் காணமுடியும்.

குணவியல்புகள் வேறுபடுவதிலும் மாறுபடுவதிலும் வாதப்பிரதி வாதங்கள் தேவையற்றவை.

குணவியல்புகள் வேறுபட்டிருந்தாலும் சரியான தீர்மானங்களை எடுப்பதில் ஒற்றுமைப்பாடு அவசியம். இந்த விடயத்தில் ஈழத்தமிழ் மக்கள் மிகவும் வித்தியாசமானவர்கள்.

எதையெடுத்தாலும் அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்காமல் அதனை எதிர்ப்பதில் இன்பம் காணும் இயல்பு எங்களுடையதாகிவிட்டது.

இனப்பிரச்சினை தொடக்கம் ஊரில் உள்ள சனசமூக நிலையப் பிரச்சினைவரை இப்படியான எதிர்ப்புவாதத்தைக் காண முடியும்.

இதன் விளைவு இருப்பதையும் இழப்பதாகவும்–எதனையும் பெறமுடியாததாகவும் போய் விடுகின்றது. இந்த நிலைமையின் தொடர்ச்சியான போக்கை இனப்பிரச்சினையிலும் நாம் காண முடியும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என நாம் விரும்பினாலும், அது யாரால் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டு விடுகின்றது

தமிழ் மக்கள் பெரும் அவலத்தை அனுபவித்து வருகின்றனர். எனவே அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதில் எங்கள் எல்லோருக்கும் உடன்பாடு உண்டு.

ஆனால், தமிழ் மக்களை நாங்கள் மட்டுமே காப்பாற்ற வேண்டும் என்று நினைத்து விடுகின்றோம். அதனால் காப்பாற்ற முடியாமல் மக்களை அவலத்திற்குள் தள்ளி விடுகின்றோம்.

யார் குற்றினாலும் அரிசியாக்கினால் போதும் என்ற மனநிலை எங்களிடம் அறவே இல்லாமல் போனதன் காரணமாக சாதாரண மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

எதற்கும் விமர்சனம்; எதற்கும் இரட்டைக் கருத்து; எதற்கும் அகடவிகடம் என்ற மனித நேயமற்ற சிந்தனை எங்கள் மனங்களை ஆக்கிரமித்து விட்டதன் காரணமாக சுயநல சிந்தனையில் இருந்து மீளமுடியாமல் உள்ளோம். இப் பெரும் துயரத்திற்கு மூல காரணமாக இருப்பது பதவியாசையாகும்.

மக்கள் எங்களை தூக்கியெறிந்து விடுவார்களோ என்ற ஏக்கத்தின் காரணமாக மக்கள் பணியைவிட தத்தம் செல்வாக்கை மக்கள் மத்தியில் காப்பாற்றுவதிலேயே முழுக் கவனம் செலுத்தப்படுகின்றது. இதனை நினைக்கும்போது வேதனை தாளமுடியவில்லை.

சில சமயங்களில் மாற்றமுடியாத தலைவிதி என்றுகூட நினைக்கும் அளவிற்கு நிலைமை உள்ளது.

ஓ! காகத்தின் கூட்டில் முட்டையிடுவது தான் குயிலுக்கான தலைவிதி என்றால் அதனை மாற்றுவது யார்? அதுபோலத் தான் எங்கள் நிலைமையுமா?

# இரண்டு முறை நோபல் பரிசு பெற்ற பெருமைக்குரிய மேரி கியூரி அம்மையார்



நமக்கு ஏற்படும் பல நோய்களைக் கண்டறிந்து அவற்றைக் குணப்படுத்துவதற்கு உதவும் ரேடியம் என்பதனை கண்டுபிடித்தவர் மேரி கியூரி அம்மையார். வாழ்வில் ஒரேயொரு முறையாவது உலகின் சிறந்த விருதான நோபல் பரிசை பெற்றுவிட வேண்டுமென்று பலர் முயற்சிக்கும்போது தன் வாழ்வில் இரண்டு முறை நோபல் பரிசு பெற்றவர் இவர்.

போலந்து நாட்டினரான இவரின் இயற்பெயர் மரியா ஸ்க்லோ டோவ்ஸ்கா. தந்தையார் ஓர் இயற்பியல் ஆசிரியர். தாயார் ஒரு பாடசாலை ஆசிரியை. ரஷ்யாவின் அடிமை நாடாக போலந்து இருந்த காலம் அது. கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டதால் மேரியும் சகோதரிகளும் இரகசியமாகவே இரவில் கல்வி கற்க வேண்டியிருந்தது.

ஐரோப்பாவின் பாரிஸ் நகரிலுள்ள சோர்போன் (Sorbonne) பல்கலைக் கழகம் மட்டுமே பெண்களுக்கான உயர் கல்வியை வழங்கியிருந்தமையால் மேரியும் சகோதரியும் பாரிஸ் நகருக்கு சென்றனர். குடும்பத்தின் பொருளாதாரச்சூழ்நிலையினால் இருவரும் வேலை செய்து பெற்றுக்கொள்ளும் பணம் மூலம் உயர் கல்வியைத் தொடர்ந்தனர். ஒரு செல்வந்தர் வீட்டில் 6 ஆண்டுகள் குழந்தைகளைப் பராமரித்து பணமீட்டினார் மேரி.

இவரின் சிறு வயதில் நோயினால் தாயார் இறந்தபோது உறுதிபூண்டதன்படி, மனித குலத்திற்கு உதவும் வகையில் கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ள எண்ணி 1903 இல் தனது ஆய்வுக் கட்டுரையை முடித்து கலாநிதி பட்டம் (Doctrate) பெற்றார். பிரான்ஸில் கலாநிதி பட்டம் பெற்ற முதற் பெண்ணும் இவரே.

ஆராய்ச்சி செய்பவருக்கு ஆய்வு கூடம் அவசியமல்லவா? பியரி கியூரி என்பவரது நட்பு அவருக்கு ஆய்வுகூட வசதியை கொடுத்தது. பியரி கியூரி எனும் துடிப்புள்ள அவ்விளைஞன் ஏற்கனவே பீலோ எலக்ட்ரிசிற்றியைக் கண்டுபிடித்தவர். இருவருமே பயணிக்கும் பாதை ஒன்றாகையினால் வாழ்க்கையிலும் இணைந்து கொண்டனர். மேரி–மேரிகியூரி ஆனார். இருவரும் இணைந்து பல ஆய்வுகளைச் செய்தனர்.

ஹென்றி பெக்குரல் (Henry Becqurel) என்பவரின் ஒரு கட்டுரையைப் படித்த பின்னர்தான் கியூரி தம்பதியினர் கதிரியக்கம் குறித்து தங்கள் ஆராய்ச்சிகளைத்தொடங்கினார்கள். இரசாயனவியல் முறைகொண்டு பொட்டாசியம் (K), யுரேனியம் (Ur) மற்றும் சல்பரை (S) பிரித்துப் பார்த்தபோது யுரேனியம் மட்டுமே கதிரியக்கம் வெளிப்படுத்துவது உறுதியானது. எனவே கதிரியக்கம் (Radio activity) என்பது தனிமங்கள் (Element) ஏற்படுத்தும் குணம் அல்ல என்பது விளங்கியது. எக்ஸ்ரே (X-ray) தூண்டப்பட மின்னாற்றல் வேண்டும்.

## மேரி கியூரி அம்மையாரின் பிறந்ததினம் இன்றாகும்

ஆனால் யுரேனியம், தோரியம் (Th) இவற்றில் வெளிப்படும் கதிரியக்கக் கதிர்கள் தன்னிச்சையாகவே உலோகத்தில் இருந்து தொடர்ச்சியாக எப்போதும் வெளிவந்து கொண்டிருந்தன. எனவே இது இயற்கை நிகழ்வு என்பதைத் தெளிவுபடுத்தி இந்த இயற்கை வினைக்கு கதிரியக்கம் (Radioactivity) என்று பெயரிட்டனர். இந்த அரிய கண்டுபிடிப்பிற்காக மேரி கியூரி ,பியரி கியூரி , ஹென்றி பெக்குரல் மூவருக்கும் 1903 -ல் பௌதிகவியல் துறைக்கான (Physics) நோபல் பரிசு கிடைத்தது.

மேலும் பல ஆய்வுகளைச் செய்த மேரிக்கு பிட்ச் பிளண்டு (Pitchblende ore) எனும் கனிமத்தில் இருந்துதான் யுரேனியம் கிடைத்தது. தூய யுரேனியம் வெளியிட்ட கதிரியக்கத்தை விட யுரேனியம் இல்லாத பிட்ச் பிளன்டுக் கழிவு வெளியிட்ட கதிரியக்கம் வியப்பில் ஆழ்த்தியது. பிட்ச்பிளென்டியை சுத்திகரித்து சோதித்தில் யுரேனியத்தைவிட 400 மடங்கு அதிகமாகக் கதிர் வீசக்கூடிய , இதுவரை கண்டறியப்படாத தனிமம் (Element) ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

பிறப்பு: நவம்பர் 7, 1867
நாடு : போலந்து
கல்வி: பாரிஸ் பல்கலைக் கழகம்
ஆராய்ச்சித்துறை: இயற்பியல், வேதியியல்
கணவர்: பியரி க்யூரி
கண்டுபிடிப்புகள்: கதிரியக்கம் (Radioactivity) பொலோனியம், ரேடியம்.
விருதுகள்: நோபல் பரிசு (இயற்பியல் துறை) -1903, டேவி பதக்கம் -1903, மெட்டஸி பதக்கம் -1904, நோபல் பரிசு(வேதியியல் துறை) 1911.
இறப்பு: ஜூலை 4, 1934 ஃப்ரான்ஸ்.
M. Curie

அதற்கு மேரி தன் தாய்நாட்டின் நினைவாக பொலோனியம் (Polonium) எனப் பெயரிட்டார். இதில் ஆச்சரியம் என்னவென்றால், யுரேனியம் மற்றும் பொலோனியம் பிரித்து எடுக்கப்பட்டும் மீதம் இருந்த பிட்ச் பிளன்டு கழிவு, முன்னரைவிட அதிக கதிரியக்கத்தைக் காட்டியது. யுரேனியக் கதிரியக்கத்தை விடவும் 900 மடங்கு அதிகமாக உக்கிர கதிரியக்கம் செய்யும். மேலும் ஒரு புதிய தனிமத்தினை 1898 இல் பிரித்து எடுத்தனர். இருளில் ஒளிர்ந்த அந்தத் தனிமத்திற்கு ரேடியம் (Radium) என பெயரிட்டனர்.

ரேடியத்தைக் கண்டுபிடித்ததற்காக 1911 ஆம் ஆண்டில் மேரி கியூரிக்கு 2 ஆவது நோபல் பரிசு இரசாயனவியல் (Chemistry) துறைக்காக கிடைத்தது.

மேரிகியூரி அவரது கணவர் பியரி கியூரி மாத்திரமன்றி அவர்களின் மகள் ஐரேனோவும் தன் கணவனுடன் சேர்ந்து செய்த கண்டுபிடிப்பிற்காக (செயற்கைக் கதிரியக்கம்) நோபல் பரிசு பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

*மேரிகியூரி அம்மையார் இரசாயனவியல் துறைக்காக நோபல் பரிசு பெற்ற 100ஆவது ஆண்டான இவ்வாண்டினை (2011) ஐ.நா. குழு இரசாயனவியல் ஆண்டாக கொண்டாடுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

விஞ்ஞானத்தின் பல துறைகளுக்காக (Multiple Science) அயராது உழைத்த அம்மையாரின் புகழுக்கு காரணமாய் இருந்த ரேடியமே அவருடைய மரணத்திற்கும் காரணமானது என்பதும் கருத்திற் கொள்ள வேண்டியதே.

## தெரிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களிற்கான தெரிவு பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டை ஏற்கனவே பரீட்சை திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் தோற்ற இருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு துரித மீட்டல் செயலமர்வு வழிகாட்டல் கருத்தரங்கும் கல்லூரியின் ஆசிய வாண்மை விருத்தி நிறுவனத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இதில் பங்குபற்றவுள்ளவர்கள் தமது பெற்றோருடன் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சமுகமளிக்குமாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கேட்டுள்ளார். (அ)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### தவறுகளையும் வாழ்த்துங்கள்



அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

மகத்தான செயல்களைச் செய்யவே இறைவன் நம்மைத் தேர்வு செய்கின்றான். அவற்றைச் செய்து முடிப்போம் என்று உறுதியெடுங்கள்.

பசியால் நலிந்து வாழும் மக்களிடையே சென்று சமயப் பிரசாரமும் தத்துவ போதனையும் செய்வது அவர்களை அவமதிப் பதாகும்.

மிருக, மனித, தெய்வீக இயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கின்றான். உன்னிடமுள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக்கூடியது தான் நல்லொழுக்கம். மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வது தீய ஒழுக்கம்.

நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள் நீ அறியாமலேயே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

வாழ்க்கையில் வெற்றிபெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும் அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். அந்தக் குணங்கள் தாம் அவர் வாழ்க்கையில் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணங்களாகும்.

## கப்பல் ஊழியர்கள் விடுவிக்கப்பட்டனர்

நைஜீரிய கடல் பகுதியில் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட கப்பல் ஊழியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிரீஸ் நாட்டை சேர்ந்த சரக்கு கப்பல் கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு நைஜீரிய கடல் பகுதியில் சென்று கொண்டிருந்தது.

அந்தக் கப்பலில் 20 ஊழியர்கள் இருந்தனர். கடந்த ஜூலை மாதம் இந்த கப்பலை கடற்கொள்ளையர்கள் கடத்தி சென்றனர்.

அவர்களை விடுவிக்க கிரீஸ் நிறுவனமும் சர்வதேச கடற்கொள்ளை தடுப்பு அமைப்பும் தீவிர முயற்சி மேற்கொண்டு வந்தன.

இந்நிலையில் கடந்த 4 ஆம் திகதி 20 ஊழியர்களும் கப்பலுடன் விடுவிக்கப்பட்டதாக கடற்கொள்ளை தடுப்பு அமைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கப்பல் அதிபர்கள் அமைப்பான இன்கோரா நிறுவனம் தனது இணையத்தளத்தில் கப்பலில் 2இந்தியர்கள் உட்பட 20 பேர் இருந்தனர். அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியிட்டுள்ளது.(அ-2)

# பாக்.இல் அணு ஆயுதங்கள் திருட்டுப்போகும் அபாயம்

## அமெரிக்கா எச்சரிக்கை

பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் திருட்டு போகும் அபாயம் அதிகரித்துள்ளதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது. அமெரிக்க புலனாய்வு அமைப்புகளுக்கு தெரியக்கூடாது என்பதற்காக வீதி வழியே அணு ஆயுதங்களை பாகிஸ்தான் எடுத்துச் செல்கின்றது. இது மிகவும் ஆபத்தானது என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இவ்விதம் எடுத்துச் செல்லும் அணு ஆயுதங்களை தீவிரவாதிகள் திருடிச் செல்லும் ஆபத்து மிகவும் அதிகமாக உள்ளது என்று அமெரிக்காவிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மே மாதம் அமெரிக்க கடற்படை பாகிஸ்தானின் அபோதாபாத் நகருக்குள் நுழைந்து சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை கொன்றது. அதிலிருந்தே பாகிஸ்தான் வசமுள்ள அணு ஆயுதங்களை அமெரிக்கா அழிக்க முற்படும் என்ற அச்சம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து சிறப்பு உத்தி வகுக்கும் பிரிவின் (எஸ்பிடி) தலைவருக்கு அந்நாட்டு அரசு ஒரு உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதில் நாட்டில் உள்ள அணு ஆயுதங்களை பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் வேறிடத்துக்கு அதாவது அமெரிக்காவுக்கு தெரியாத வகையில் மாற்றுமாறு தெரிவித்துள்ளது.

இவ்விதம் அணு ஆயுதங்களை இராணுவ பாதுகாப்போடு கொண்டு செல்லாமல் சிறிய சரக்கு வான்களில் ஜன சந்தடி மிக்க வீதிகளின் வழியாக கொண்டு செல்கின்றனர்.

இவ்விதம் கொண்டு செல்லும் அணு ஆயுதங்கள் அந்தந்த நகரையே அழிந்துவிடும் சக்தி வாய்ந்தவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோல அணு ஆயுதங்களை எடுத்துச் செல்வது அதிகரித்துள்ளதாகவும் இது மிகவும் கவலையளிக்கின்றது என்றும் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் கருதுவதாக செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் இது குறித்து அதிகாரபூர்வ கருத்து எதையும் பென்கடன் தெரிவிக்க மறுத்துவிட்டது.

பாகிஸ்தானில் உள்ள ஜிஹாதி அமைப்பும் அணு ஆயுதங்களை பறித்துச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளதாக எஸ்பிடி கருதுகின்றது. ஆனால் அபோதாபாத்தில் அமெரிக்க படைகள் நுழைந்து பின்லேடனைக் கொன்ற பின்னர் அணு ஆயுதங்களை அமெரிக்காவே அழிக்க முயலலாம் என்று தனது கவலையை எஸ்பிடி தலைவரிடம் ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கயானி வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் இந்திய புலனாய்வு அமைப்புகளுக்குத் தெரியாமல் அணு ஆயுதங்கள் வேறிடங்களுக்கு மாற்றப்படும் என்று கயானிக்கு எஸ்பிடி தலைவர் கித்வாய் உறுதியளித்துள்ளார் எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

அணு ஆயுதங்கள் திருடப்பட்டால் நியூயோர்க் நகரில் இரட்டைக் கோபுரம் மீது நடத்தப்பட்ட தாக்குல் போன்றோ அல்லது மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதல் போன்றோ பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று மேலை நாட்டு புலனாய்வு அமைப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன என்றும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# ஜெனோவாவில் கடும்மழை; ஆறு பேர் உயிரிழந்தனர்




இத்தாலிய துறைமுக நகரான ஜெனோவாவில் ஏற்பட்ட கடும்மழை, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தில் குறைந்தது 6 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 2 குழந்தைகள் உட்பட ஐந்து பேர் வெள்ளத்திற்கு அவர்கள் தஞ்சம் அடைந்திருந்த கட்டடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர். வெள்ளநீரில் அள்ளுண்டு வந்த கார்களில் சிக்கி ஒரு பெண் உயிரிழந்தார்.

வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்றும் மாடிக்கட்டடங்களில் ஏற வேண்டாம் என்றும் ஜெனோவா நகர பொதுமக்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. நகரிலிருந்து பலர் காணாமல் போய்விட்டதாகவும் கூறப்படுகின்றது.

இது எதிர்பாராத துக்கரமான சம்பவம் என்று நகர மேயர் மார்த்தாவிசென்சி தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் வடகிழக்கு நகரான ஜெனோவாவில் வெள்ள நீருடாக மக்கள் நடந்து செல்வதையும் வெள்ள நீரில் கார்கள் மிதந்து போவதையும் இத்தாலிய தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின.

இரண்டு ஆறுகளின் கரைகள் உடைப்பெடுத்துள்ளதால் மேட்டுப்பாங்கான இடங்களுக்குச் செல்லும் படியும் மக்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்திலிருந்து மக்களை வெளியேற்ற இறப்பரிலான படகுகளை மீட்புப் பணியாளர்கள் பயன்படுத்துகின்றனர். வீதிப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தோடு கடல் மற்றும் ஆற்று நீரும் புகுந்ததால் உல்லாசப் பிரயாணத்திற்கு பிரசித்தி பெற்ற துறைமுக நகராக ஜெனோவா வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. (அ-2)




# பனிமூட்டத்தின் காரணமாக விபத்து; ஏழு பேர் உயிரிழப்பு

(லண்டன்)

பிரிட்டனில் தென்மேற்குப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில், நேற்று முன்தினம் நிகழ்ந்த விபத்தில் ஒன்றன் பின் ஒன்றாக, 34 வாகனங்கள் மோதிக் கொண்டன. இந்தக் கோரமான விபத்தில், ஏழு பேர் பலியாயினர்.

எனினும் பலர் இறந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. பிரிட்டனின் தென்மேற்குப் பகுதியில் உள்ள சோமர்செட் என்ற இடத்தில், நேற்று முன்தினம் மழைக் காரணமாக அதிக பனிமூட்டம் நிலவியது. இந்நிலையில் வீதியில் சென்று கொண்டிருந்த சரக்குலொறி ஒன்று பனிமூட்டத்தில் மெதுவாக சென்று கொண்டிருந்தது.

அதேநேரம் பின்னால் வந்த வேறு சில லொறிகள், முன்னால் சென்ற லொறியின் மீது வேகமாக மோதின. இதையடுத்து, அதிக பனிமூட்டத்தின் காரணமாக என்ன நடந்தது



எனத் தெரியாமலேயே பல வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதிக் கொண்டன. இதில் 34 வாகனங்கள் சிக்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் சிக்கிக் கொண்ட வாகனங்களில் பல தீப்பிடித்து எரியத் தொடங்ஶ்ரீகின.

உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் கொண்டு வரப்பட்டு பலமணி நேரப் போராட்டத்திற்குப் பின் தீ அணைக்கப்பட்டது. (அ-2)

# இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைய அமெ. ஆலோசனை

(வோஷிங்டன்)

இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் முத்தரப்பு பேச்சுவார்த்தை வரும் டிசம்பரில் நடைபெறும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் வெளியுறவுத்துறை துணைச்செயலாளர் வில்லியம்பர்ன்ஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது;

பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடான இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து பிராந்திய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்படும் எனவும் அவை புத்தாண்டில் எழுச்சியை உருவாக்கும் என தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

கிழக்கு ஆசிய நாடுகளில் இந்தியா பொருளாதாரரீதியிலும், கலாச்சாரத்துறையிலும் சிறந்து விளங்குவதாகவும் அதனுடன் பொருளாதரா ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்திகொள்ளவும் அமெரிக்கா விரும்புகின்றது.

மேலும் ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா மற்றும் வியட்நாம் நாடுகளுடனும் அமெரிக்கா நட்புறவை வளர்த்துக் கொள்ள விரும்புவதாகவும் அவர் கூறினார். (அ-2)

# கடாபியை கொன்ற பின்னர் புதிய அரசு அமைக்கும் முயற்சி

லிபியாவின் ஜனாதிபதி கடாபியைக் கொன்று அவரது கொடுங்கோல் ஆட்சிக்கு முடிபு கட்டிய பின் அங்கு புதிய அரசு அமைக்கும் முயற்சிகள் தொடங்கிவிட்டன.

எனவே நேட்டோ படைகள் கொஞ்சம் கொஞ்சமாக லிபியாவை விட்டு வெளியேறுகின்றன. கனடா நாட்டு விமானப் படைகளும் தன் தாய்நாட்டுக்கு திருப்பிவிட்டன.

கனடாவில் உள்ள நோவா ஸ்கோட்டியா என்ற இராணுவத் தளத்திற்கு நேற்று முன்தினம் காலை லிபியா சென்றிருந்த இராணுவ விமானங்கள் திரும்பின.

அதிலிருந்து விமானப்படை வீரர்களை வரவேற்க ஆனந்தக் கண்ணீருடன் அவர்கள் குடும்பத்தினர் குழுமியிருந்தனர்.

சென்ற வசந்த காலத்தில் கனடாவை விட்டு பறந்த CP-140 அரோரா விமானப் படை இந்தப் பனிக்காலத்தில் திரும்பியிருக்கிறது.


இந்தப் படை லிபிய பொதுமக்களை கடாபியின் படையினரின் வன்முறைத் தாக்குதலிலிருந்து பாதுகாக்க சென்றது.

கனடாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட்டர் மேக்கே இந்த படையினரை வரவேற்க விமானத்தளத்திற்கு வருகை தந்தார். அப்போது அவர் கூறுகையில், தனது நாடு சர்வதேச ஒற்றுமைக்கு சிறந்து பங்காற்றியுள்ளது.

நேட்டோவின் தலைமைப் பதவிக்கு கனடா இராணுவத்தின் ஆடவரும் மகளிரும் தம்மை உறுதிப்படுத்திக் கொண்டனர் என்று பெருமைபடக் கூறினார். (அ-2)

# பரணா - சங்கா அபாரம்

# இலங்கை அணி முன்னிலை



(சார்ஜா)

வெலகெதரவின் துல்லியமான பந்து வீச்சில் சிக்கிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 340 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 73 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 164 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

இலங்கை-பாகிஸ்தான் அணிகள் மோதும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இ ந் நி லை யி ல் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3ஆம் திகதி சார்ஜாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 413 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள்ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 282 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு அப்துர் ரீமன் 3, உமர் குல் 5 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றமளித்தனர்.

அடுத்து வந்த சயிட் அஜ்மல் நிதானமாக ஆட மறுமுனையில் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார்.

இதில் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 261 பந்துகளில் (7பவுண்டரிகள் ஒரு சிக்ஸ்சர் உட்பட) 89 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 340 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதில் சயிட் அஜ்மல் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் வெலகெதர 35.2 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 87 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ரங்கண ஹேரத் 3விக்கெட்டுக்களையும் குலசேகர, ராண்டிவ் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்சில் 73 ஓட்டங்கள் முன்னிலையிலிருந்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

ஆரம்பத்திலே அணித் தலைவர் திலகரட்ண டில்சான் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

அடுத்து பரணவிதானவுடன் இணைந்த குமார் சங்கக்கார சிறப்பாக ஆட இலங்கை அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் குமார் சங்கக்கார 89 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். எனினும் அவர் 91 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த மஹேல ஜெயவர்த்தன 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து மத்யூஸ் களமிறங்க மறுமுனையில் பரணவிதான 128 பந்துகளில் அரைச்சதம் கடக்க இலங்கை அணி 150 ஓட்டங்களைத் தொட்டது.இதில் அஞ்சலோ மத்யூஸ் 13 ஓட்டங்களுடனும் அடுத்து வந்த சில்வா பூச்சியத்துடனும் சயிட் அஜ்மலின் பந்தில் ஒரே ஓவரில் வெளியேறினர்.

இந் நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பரணவிதான 66 ஓட்டங்களுடனும் குலசேகர 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் உமர் குல்,சயிட் அஜ்மல் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹபீஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஐந்தாவதும் இறுதி நாளான ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் டுக்கள் கைவசமுள்ள நிலையில் 237 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

# நியூசிலாந்து திரில் வெற்றி



(புலவாயோ)

புலவாயோ டெஸ்டில் 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தொடரை வென்றது.

சிம்பாவே, நியூசிலாந்து அணிகள் இடையிலான ஒரே ஒரு டெஸ்ட் போட்டி புலவாயோவில் நடந்தது. இதில் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 426,சிம்பாவே 313 ஓட்டங்கள் எடுத்தன.இரண்டாவது இன்னிங்சில் நியூசிலாந்து அணி 8விக்கெட்டுக்கு 252 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இரண்டாவது இன்னிங்சில் 366 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், நான்காம் நாள் ஆட்டநேர முடிபில், சிம்பாவே அணி 2 விக்கெட்டுக்கு 62 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

### பிரண்டன் சதம்


நேற்று முன்தினம் ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. மவோயோ அரைச்சதம்(52) அடித்து ஆட்டமிழந்தார். இதன் பின் இணைந்த பிரண்டன் ரெய்லர், தைபு ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பிரண்டன் ரெய்லர் சதம் அடித்தார். தைபுவும் அரைசதம் அடிக்க, சிம்பாவே அணியின் வெற்றிக்கு 101 ஓட்டங்களே தேவைப்பட்டது. கைவசம் 7 விக்கெட்டுக்கள் இருந்தது.

### திரில் வெற்றி

இந்நிலையில் பிரண்டன் ரெய்லர் (117), தைபு (63),அடுத்தடுத்து ஆட்டமிழக்க, போட்டி நியூசிலாந்து பக்கம் திரும்பியது. பின்வரிசையில் சக்கபவா (5), கியூபே (14),பிரைஸ் (4) ஆகியோர் பிரேஸ்வெல் வேகத்தில் வரிசையாக வீழ்ந்தனர். வோலர் (29), ஆறுதல் தந்தார். கடைசி 28 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்த, சிம்பாவே அணி இரண்டாவது இன்னிங்சில் 331 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 34 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து சார்பில் பிரேஸ்வெல் 5, விக்டோரி 3 விக்கெட் வீழ்த்தினர்.

# மேற்கிந்தியத் தீவுகள் நிதான ஆட்டம்



சந்தர்போலின் பொறுப்பான சதத்தின் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில்அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 256 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று டில்லியில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடும் மேற்கிந்திய தீவுகள் அணி சந்தர்போல், பிரத் வைற்றின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 256 ஓட்டங்களை எடுத்தது. இதில் சிவ்நாரயணன் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 111 ஓட்டங்களையும் பிரத் வைற் 63 ஓட்டங்களையும் பாயுஜ் ஆட்டமிழக்காமல்19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரஜன் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# குழந்தைகள் பிறக்கும் மாதத்திற்கும் ஆயுள், தொழில், நோய்களுக்கும் தொடர்பு

## ஆய்வில் தகவல்

பிறக்கும் குழந்தைகளை எதிர்காலத்தில் நல்ல தொழில் தகைமையுடன் உருவாக்கிவிட வேண்டும் என்பது ஒவ்வொரு பெற்றோரினதும் எண்ண அலையில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு விடயமாகும். ஆனால், பிள்ளைகள் பிறக்கும் நேரமானது பிற்காலத்தில் அவர்கள் எந்த தொழிலை தெரிவு செய்வார்கள் என்பதை தீர்மானிக்கும் என ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மாதங்களில் பிறக்கும் குழந்தைகள் எதிர்காலத்தில் அவர்கள் எந்தத் தொழிற்துறையில் ஈடுபடுவார்கள் என்பதை சுட்டிக்காட்டக்கூடும் என்பதை பிரித்தானிய தேசிய புள்ளிவிபர அலுவலகத்தின் புள்ளிவிபரங்கள் தொடர்பான ஆய்வொன்று தெரிவிக்கின்றதாம்.

குழந்தைகள் பிறக்கும் மாதங்கள் அவர்களின் புத்திக்கூர்மை முதல் ஆயுட்காலம் வரையான பல விடயங்களில் தாக்கம் செலுத்துகிறது என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக டிசம்பர் மாதத்தில் குழந்தை பிறந்தால் அக்குழந்தை அதிகமாக பல் வைத்தியராக வர அதிக வாய்ப்புள்ளதாகவும் அதேபோல் ஜனவரி மாதத்தில் அக்குழந்தை பிறந்தால் கடன் வசூலிப்பாளராக வர அதிக வாய்ப்புள்ளதெனவும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அதேபோல் பெப்ரவரி மாதத்தில் பிறக்கும் குழந்தைகள் கலைஞர்களாகவும் மார்ச் மாதம் பிறக்கும் குழந்தைகள் விமானிகளாகவும் இருக்க அதிக வாய்ப்புள்ளதாம்.

ஏப்ரல், மே மாதங்களில் பிறக்கும் குழந்தைகளின் தொழிற்துறைகள் பரந்த எண்ணிக்கையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை,கோடைகால மாதங்களில் பிறக்கும் குழந்தைகள் அதிக வருமானங்களைப் பெறக்கூடிய தொழிற்சார் கால்பந்தாட்ட வீரர்களாகவோ வைத்தியராகவோ அல்லது பல் வைத்தியர்களாகவோ வருவதற்கான வாய்ப்பு குறைவாம்.

19 வகையான தொழிற்துறைகளச் சார்ந்த பலரின் பிறந்த மாதங்களை ஆராய்ந்ததன் மூலம் ஆய்வாளர்கள் இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கான காரணங்களை விபரிப்பது கடினம் எனவும் ஆனால் குழந்தைகள் பிறக்கும் மாதத்திற்கும் அவர்களின் ஆரோக்கிய பிரச்சினைகளுக்கும் விஞ்ஞான ரீதியான அடிப்படை உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வசந்த காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு அல்ஸீமர், ஆஸ்துமா முதலிய நோய்களுக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகமாம். அவர்கள் ஏனைய மாதங்களில் பிறக்கும் குழந்தைகளைவிட வகுப்பில் குறைந்தளவு புத்திசாலிகளாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாய் கருவுற்றிருக்கும்போது சூரிய ஒளி படுதலானது இவ் வித்தியாசங்கள பலவற்றுக்கு தொடர்புள்ளது என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சூரிய ஒளியானது உடலிற்கு விற்றமின் டி யை கொடுக்கின்றது. வாழ்க்கையின் ஆரம்ப பருவத்தில் இது குறைவாக இருந்தால் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அவர்கள் கூறுகின்றனர்.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானியான ரஸெல் போஸ்டர் தெரிவிக்கையில், இத்தாக்கங்கள் மிகவும் சிறியதாக இருக்கும். ஆனால் அவை மிகவும் தெளிவானவை என தெரிவித்துள்ளார்.

நான் சோதிடத்திற்காக குரல் கொடுக்கவில்லை. அது அபத்தமானது. ஆனால் நாம் பருவகால இடைத்தாக்கங்களுக்கு உட்படாதவர்கள் அல்லர் என அவர் கூறியுள்ளார்.

TILKO JAFFNA CITY HOTEL
70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com
Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers
Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen
உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கு ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...
இந்திய, சீன மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...
மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட உள்ளது.





உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...
T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
யாழ்ப்பாணம்
aramex delivery unlimited
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825





இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134




# முற்போக்கு பட்டதாரிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வேலையற்றோர் முற்போக்கு பட்டதாரி சங்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் அண்மையில் வேலையற்ற பட்டதாரிகள் இணைந்து நடத்திய சந்திப்பின் போது இச் சங்கம் உருவாக்கப்பட்டது.

இதன் நிர்வாக இணைப்பாளராக நா.சிவகரனும், நிர்வாக அங்கத்தவர்களாக ஆறு பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வேலையற்ற பட்டதாரிகளின் நிலைமைகளை வெளிப்படுத்துவதற்கு எவரும் முன்வராத நிலையில் வேலையற்றோர் முற்போக்கு பட்டதாரிகள் சங்கம் உருவாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் சங்கம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று யாழ்.மாவட்ட வேலையற்றோர் முற்போக்கு பட்டதாரிகள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முற்போக்கு பட்டதாரிகள் சங்கத்தினர் ஆளுநர் உட்பட பல்வேறு தரப்பினரை சந்தித்துப் பேசவுள்ளதாக கூறப்பட்டது. (எ-9,11)

# பதில் தலைவராக ஜோன் அமரதுங்க



நாடாளுமன்றத்தில் பதில் எதிர்க் கட்சித் தலைவராக செயற்படுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.க. வரலாற்றில் இவ்வாறு பதில் எதிர்க் கட்சித் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

ரணில் விக்கிரமசிங்க இவ்வாரம் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு செல்லும்போது ஐ.தே.க. பதில் தலைவராக கரு ஜயசூரியவை ரணில் விக்கிரமசிங்க நியமித்திருந்தார். எனினும் இம்முறை கட்சியின் பதில் தலைவராக எவரும் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது (ஏ)

# கூட்டமைப்பு - அமெரிக்கா...

திணைக்களம் அதிகாரபூர்வமாக எவ்வித செய்திக் குறிப்பையும் இதுவரை வெளியிடவில்லை.

அமெரிக்க விஜயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரிதாகக்கூறியிருந்த போதிலும், இச் சந்திப்புக் குறித்த விபரங்கள் முழுமையாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் வாஷிங்டனில் நன்கு அறியப்பட்ட சுற்றுலாச் சின்னமொன்றிற்கு முன்பாக நின்று எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றையே வெளியிட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே வாஷிங்டனில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்ற சந்திப்புகள் குறித்து இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அறிவாரா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இக்கேள்விக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் இச் சந்திப்புத் தொடர்பில் ஹிலாரி கிளின்டன் நிச்சயமாக அறிவார் எனப் பதிலளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இந்தியாவின் ஆதரவு...

நிதியையோ எதிர்பார்க்கவில்லை. அவர்கள் பிரஜைகளாக கௌரவத்துடன்வாழ்வதற்கான உரிமையைநிலை நாட்டுவதற்கே விரும்புகின்றனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுகின்றபோதும் இந்திய ஐக்கிய முற்போக்கு முன்னணி அரசாங்கம் மௌனமான பார்வையாளராகவே இருக்கின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றும் விடயத்தில் த[illegible] மாநில அரசாங்கம் முரண்பாடான [illegible]லைப்பாட்டைப் பின்பற்றுவதாகவும் அவர் கூறினார்.

இவர்களின் கருணை மனுவை மீள்பரிசீலனை செய்யுமாறு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய கட்சிகளில் ஒன்றாக அ.தி.மு.க விளங்கிய போதிலும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு உயர் நீதிமன்றில் தமிழக அரசாங்கம் ஆதரவளித்தது. இவ்விடயத்தில் தமிழக சட்டசபையின் தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு மத்திய அரசாங்கம் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்திய கம்யூனிஸ் கட்சி விரும்புகிறது எனவும் அவர் தெரிவித்தார். (எ-5)

# விடுதலைப்...

மற்றும் முதலீடுகள், தீவிரவாத தாக்குதல் அச்சமின்றி வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இவையெல்லாம் ரணில் விக்கிரமசிங்கவின் கண்களுக்கு தெரியவில்லை.

பிரதான எதிர்க் கட்சியாக ஐ.தே.க இருந்தாலும் போருக்கு ஆதரவு வழங்கவில்லை. இராணுவ வழிமுறையின் மூலம் விடுதலைப் புலிகளை மண்டியிடச் செய்ய முடியும் என்று ஐ.தே.க. நம்பவில்லை.

நான்காவது கட்ட ஈழப்போர் நடந்த காலத்திலோ அல்லது போருக்கு பின்னரோ இராணுவத்துக்கு ஆதரவு தெரிவித்து ஐ.தே.கவினாலோ அல்லது அவராலோ வெளியிடப்பட்ட எந்தவொரு அறிக்கையாவது ரணில் விக்கிரமசிங்கவினால் காட்ட முடியுமா?

தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபடாமல் பொறுப்புக் கூறும் விவகாரம் தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியுமா?

ஐ.தே.கவின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு விடுதலைப் புலிகள்தமது மரபுவழிபோர்ப்பலத்தை அதிகரித்துக் கொண்ட விபரங்கள் வெளியாகி விடும் என்று ரணில் விக்கிரசிங்க அச்சம் கொண்டுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கப்பல் கப்பலாக புலிகள் ஆயுதங்களையும்; வெடிபொருட்களையும்; கருவிகளையும் கொண்டு வந்து இறக்கியபோது ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஆலோசகர்களும் எங்கே போயினர்? இராணுவ விவகாரங்களில் ஐ.தே.கவின் வழிகாட்டல் போன்று முட்டாள்தனமாக நாம் இருக்கமுடியாது.

நந்திக் கடலோரத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கதையை முடித்துவிட்டோம். 12ஆயிரம்புலிகளை கைது செய் தோம். பெருந்தொகையான ஆயுதங்கள், வெடிபொருட்கள், கருவிகளைக் கைப்பற்றினோம்.

பிரபாகரனுக்கு பின்னர் பொறுப்பேற்ற குமரன் பத்மநாதனைக் கைது செய்து புலிகளின் ஒரு கப்பலையும் கைப்பற்றியுள்ளோம். நாம் இவற்றையெல்லாம் சாதித்துள்ள நிலையிலும் அனைத்துலக சமூகத்தின் ஒரு பகுதி புலிகளின் பின்னால் நிற்கின்றது.

போருக்கு ஆதரவு அளிக்காத ரணில் விக்கிரமசிங்கவும், அவரது கட்சியும் எப்போதும் எமது முயற்சிகளைக் குறைத்தே மதிப்பிடுகின்றனர். கேலி செய்கின்றனர்.

1990ல் இரண்டாவது ஈழப் போர் தொடங்குவதற்கு முன்னர் ஐ.தே.க நிர்வாகத்தில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்ட நிதி குறித்து அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

நோர்வேயில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புலிகளின் வானொலிக்கான கருவிகளுக்கு செலுத்தப்பட்ட சுங்கத் தீர்வை உள்ளிட்ட சில பரிமாற்றங்கள் குறித்த ஆவண சாட்சியங்கள் அரசாங்கத்திடம் உள்ளன.

போரின்போது நடந்து கொண்ட விதம் காரணமாக பாதுகாப்புத் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறும் உரிமையை ஐ.தே.க. இழந்து விட்டது என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். (ச-5)

# இலங்கையை...

பிரித்தானியா நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடந்த வாரம் எழுப்பிய கேள்வி தொடர்பில் பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு இவ்வாண்டின் ஆரம்பத்தில் தான் மேற்கொண்ட விஜயத்தின் போது இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான எந்த விவகாரங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தின்போது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன்பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்கள் குறித்து பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சின் அலுவலகம் வெளியிட்ட மனிதவுரிமைகள் மற்றும் ஜனநாயகம் -2010 என்ற அறிக்கையில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை கவலைக்குரிய நாடாக பட்டியலிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்கள் குறித்த தமது கரிசனைகளை தொடர்ச்சியாக இலங்கை அரசிற்கு தெரிவித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், இவ்விவகாரம் தொடர்பில் அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் பேசியதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன், பாதிக்கப்படக்கூடிய மக்களின் மனிதவுரிமை நிலைமைகள் மேம்பாடு காணப்பட வேண்டும் என்பதை பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாகவும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள் ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை குறித்து சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, [illegible]தற்குப் பொறுப்பானவர்கள் நீதியின் [illegible]ன் னிறுத்தப்பட வேண்டும் என்பதை [illegible]ங்கை அரசாங்கத் திடம் வலியுறு[illegible] வருகிறோம் என அலிஸ்ரெயர் பேர[illegible] மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

# அடிப்படை வசதி...

உள்ள அம்பாள் குளத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் இதனால் வர்த்தகர்களும்; பொது மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதி அற்ற இடத்தில் இந்த பொதுச் சந்தை அமைக்கப்பட்டிருப்பதால் அங்கு மக்கள் செல்வதில்லை. இதனால் வழமையான வியாபார நடவடிக்கைகள் இடம் பெறுவதில்லை. இதன் காரணமாக சந்தை வியாபாரிகள் பெரும் நட்டத்திற்கு உள்ளாக நேரிட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் இருந்து தொலைவில் ஒதுக்குப்புறமான இடத்திற்கு சந்தையைக் கொண்டு சென்றிருப்பதனால் நகரில் இருந்து பெரும் பணம் செலவழித்து சந்தைக்குச் செல்ல வேண்டி இருப்பதாகப் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகரின் பொதுச் சந்தை ஆறு மாதத்தில் அதன் பழைய இடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு விடும் என அதிகாரிகள் உறுதியளித்திருந்த போதிலும் ஒரு வருடத்திற்கு மேலாகிய போதிலும் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்று சந்தை வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேபோன்று கிளிநொச்சி பேருந்து நிலையமும் பயணிகள் நிற்பதற்கு கூட வசதியற்ற நிலையில் உள்ளது.

பேருந்துகள் நிற்பதற்கு உரிய இடம் இல்லை. பயணிகள் தங்கி நிற்பதற்கு நிழற்குடைகள் கூட இல்லாமல் இருக்கிறது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து கருத்துத் தெரிவித்த இந்தப் பொது வசதிகளை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பான கரைச்சி பிரதேச செயலாளர் குமாரசுவாமி தவசோதி, மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டபோது பல்வேறு காரணங்களால் அம்பாள்குளத்திற்கு சந்தையை மாற்ற வேண்டியிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தையில் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதை ஒப்புக்கொண்ட அவர் அவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அத்துடன் பழைய இடத்தில் 274 மில்லியன் ரூபாய் செலவில் புதிய சந்தைக் கட்டிடத் தொகுதி அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முதல்கட்ட வேலைகள் நடைபெற்று வருவதாகவும் வரும் 2013 ஆம் ஆண்டு இந்தப் பணிகள் முற்றுப்பெறும் என்றும் தெரிவித்துள்ளார். (எ-5)


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளும்
இலவச ஆங்கில வகுப்பு [English Workshop]
10.11.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : (ஆறு பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவில் சேரலாம்)
காலை : 8-9.30, 9.30-11, 11-12.30
மாலை 1-2.30, 2.30-4, 4-5.30
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.[illegible]ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, றேவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.